# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, அருள் அமலா - சென்னை, ஜோஸ்பிட்டா மேரி, எதெல்பெர்கா, வீர்ஜின், ஜெசிந்தா ஆரோக்கிய மேரி - திருச்சி, ஸ்டெல்லா ரோஸ் -திண்டுக்கல், ஜீலி எலிசபெத் - தஞ்சாவூர், மார்சலோசா மேரி, லோரா மேரி - தூத்துக்குடி, ஜெய சேகரி - கொடைக்கானல், சிரில் - கடலூர், ஆக்னஸ், அருள் மேரி, லூக்காஸ் மேரி, அனன்சியா மேரி, பிலோமினாள், டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, டோன்போஸ்கோ மேரி - கும்பகோணம், சலேத் மேரி - திருப்பூர், புஷ்பா மேரி - காரைக்குடி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி - திருநெல்வேலி, செபஸ்தியம்மாள், செலின், சின்னராணி - விழுப்புரம், செல்வராணி - செக்கடி, ரூபி மேரி - கரூர்

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், G.S.பாத்திமா, சந்தனம், ஜான் ஜோசப், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, லூதியா மேரி, ஞான சேகரன் - திருச்சி; லீலாவதி, அமல செல்வி – திண்டுக்கல்; மேரி - இளையரசனேந்தல்; சிப்ரியான் - தெளி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், K. தீபா - கும்பகோணம்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. ஜீலி எலிசபெத் - தஞ்சாவூர்

G. S. பாத்திமா - திருச்சி

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# பரிவு

## பதிப்பாசிரியர் பக்கம்

**அ.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**


நம் அன்னை மரியாள் ஆண்டவரின் தாய் மட்டுமல்ல, உலக மக்களின் தாயாக இருக்கின்றார். உலக மக்களின் தாயாக இருக்கக்கூடிய அன்னை மரியாள் தன்னுடைய பிள்ளைகளான உலக மக்கள் கஷ்டப்படும்போது, பாவம் செய்யும் போது, பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளும்போது கண்டுகொள்ளாமல் இருப்பதில்லை. மாறாக அவர்களுக்காக தன் மகனிடம் பரிந்து பேசுபவராக இருக்கின்றார்.

அன்னை மரியாள் விண்ணகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டபின் விண்ணிலேயே இருந்துவிடவில்லை. பலமுறை மண்ணகத்துக்கு வந்து காட்சிக் கொடுத்திருக்கின்றார். முக்கியமாக போர்ச்சுகல் நாட்டின் பாத்திமா நகரில் சிறுவர்களுக்கு காட்சிக் கொடுக்கும்போது பாவிகளின் மனமாற்றத்திற்கு ஜெபம் செய்ய அழைப்பு விடுக்கின்றார். அதே அன்னை ஃபிரான்ஸ் நாட்டில் இருக்கக்கூடிய லூர்து நகரில் பெர்னதெத் என்ற சிறுமிக்கு பதினெட்டுமுறை காட்சி கொடுத்திருக்கின்றார். இவ்வாறு காட்சிக் கொடுக்கும்போது பாவிகளின் மனமாற்றத்திற்கு ஜெபிக்க கூறுகின்றார்.

பாவிகளின் மனமாற்றத்திற்காக ஜெபிக்கவும், பரிந்து பேசவும் அன்னை மரியாளிடம் பரிவு என்ற குணம் இருந்தது. இந்த குணம் அன்னை மரியாளிடம் பாதியில் வந்து சேர்ந்தது அல்ல. அவள்



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| குணமளிக்கும் லூர்துநகர் அன்னை | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| குடும்ப வாழ்வில் மரியா | - 28 |
| எனக்கு ஓர் ஆசை அம்மா | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

பிறப்பிலே வந்த பிறவிக் குணம். இந்த பிறவிக் குணமான பரிவு அன்னை மரியாளின் வாழ்க்கை முழுவதும் நிரம்பி இருக்கின்றது. தன் உறவினரான எலிசபெத் முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கின்றார் என்று தெரிந்ததும் அவருக்கு உதவுவதற்கு யாருமில்லை என்று அவர்மீது பரிவு கொள்கின்றார். அந்த பரிவின் அடையாளமாக தன் உறவினர் எலிசபெத் தங்கியிருக்குமிடம் மலைநாடாக இருந்த போதிலும் அவருக்கு உதவுவதற்காக ஓடிச்செல்கின்றார்.

தன் மகனோடும் அவரின் சீடர்களோடும் அன்னை மரியாள் கானாவூர் திருமணத்திற்கு செல்கின்றார். திருமணவிருந்தில் திராட்சை இரசம் தீர்ந்து விடுகிறது. திருமணவீட்டாரின் இக்கட்டான நிலைக் கண்டு அன்னை மரியாள் அவர்கள்மீது பரிவு கொள்கின்றார். தன்னுடைய மகனிடம் திருமண வீட்டாருக்காக பரிந்து பேசி, தன் மகனை முதல் அதிசயத்தை செய்ய வைத்து திருமண வீட்டில் இருந்த பிரச்சனையை தீர்த்து வைக்கின்றார்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து மக்கள் பணியினை செய்ய ஆரம்பித்தபிறகு அவரைப் பிடிக்காதவர்கள் அவரைப் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறுகின்றார்கள். அவை அன்னை மரியாளின் காதுகளை அடையும்போது ஆண்டவர் இயேசு மீது பரிவு கொள்கின்றார். உடனடியாக தன் மகன் இயேசுவைப் பார்க்கச் செல்கின்றார்.

ஆண்டவர் இயேசுவின் இறப்பு உயிர்ப்புக்குபின் மொத்த சீடர்கள் கூட்டமும் சிதறிவிட்டது. சிதறுண்டிருந்த சீடர்கள் கூட்டத்தைப் பார்த்ததும் அன்னை மரியாள் அவர்கள் மீது பரிவு கொள்கின்றார். மொத்த சீடர்கள் கூட்டத்தையும் ஒன்றிணைக்க ஆரம்பிக்கின்றார். தூய ஆவியாரை சீடர்கள் பெற்றுக்கொண்டதில் முக்கிய பங்காற்றுகின்றார்.

இந்த பரிவைக் காட்டுகின்ற குணம் அன்னை மரியாளின் விண்ணுலக வாழ்க்கையிலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அன்னை மரியாள் கொண்டிருக்கும் பரிவின் வெளி அடையாளம்தான் இன்று அன்னை மரியாளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள அனைத்து ஆலயங்களிலும் நிரம்பி வழிகின்ற மக்கள் கூட்டம். தன்னுடைய உதவியை தேடி நாடி வருகின்ற யாரையும் அன்னை ஏமாற்றுவதில்லை. அத்தனைபேரின் தேவைகளுக்காகவும் தன் மகன் இயேசுவிடம் பரிந்து பேசுகின்றார்.

நம் அனைவரின் தாயான அன்னை மரியாள் நம்மிடம் எதிர்பார்ப்பது நாம் நம்முடைய சக மனிதர்களிடம் பரிவுள்ளம் கொண்டவர்களாக நடந்து கொள்ள வேண்டுமென்று.

தந்தை கடவுள் கொண்ட பரிவின் அடையாளம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து

மகன் இயேசு கொண்ட பரிவின் அடையாளம் மீட்பு.

அன்னை மரியாள் கொண்ட பரிவின் அடையாளம் மகனிடம் பரிந்து பேசுவது

நம்முடைய பரிவின் அடையாளமாக எது இருக்கப்போகின்றது?

**பரிவு மனிதர்களின் குணம்**
**இறைவன் கொடுத்த குணம்**





முறையில் கருத்தரித்தால்தான் நலம் என்று மருத்துவர் கூறினார்கள். எவ்வளவு மருத்துவம் பார்த்தும் பலன் இல்லை. நான் மாதாவிடம் விண்ணப்பம் செய்தேன். என்ன ஆச்சரியம் மாதாவின் அருளால் மகப்பேறு கிடைத்தது. மேலும் எவ்வளவு கஷ்டங்களுக்கு அப்பால் மாதாவின் அருளால் சுகப்பிரசவம் ஆனது. மழலைச் செல்வம் தந்ததிற்காகவும், குழந்தை நல்ல முறையில் பிறந்ததிற்காகவும், ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பாலசுப்ரமணியம்- ஷர்மிளா – செங்கல்பட்டு**

எங்களுக்கு 2013-ல் திருமணம் நடந்தது. ஆறு வருடங்கள் குழந்தையில்லை. டிசம்பர் மாதம் 2018-ல் ஆலயம் வந்தோம். அப்போது குருவானவர் வைத்த பிரசங்கம் என் மனதை உலுக்கியது. நம்பிக்கையோடு மன்றாடினேன். 2019 பிப்ரவரியில் எனக்கு டெஸ்ட் எடுத்தபோது மாதாவின் அருளால் கரு உண்டானது. டிசம்பர் மாதம் குழந்தை பிறந்தது. எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. நம்பிக்கையோடு வாருங்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கஸ்தூரி – கண்ணகிநகர்**

என் மகள் படிப்பு செலவிற்காக அஞ்சலகத்தில் சேமிப்பு கணக்கு வைத்திருந்தேன். ஏழு வருடம் கழித்து பணம் எடுக்க சென்ற போது பெயர் திருத்தம் இருப்பதாகவும் மேலும் பணம் எடுக்க முடியாது என்றும் கூறினார்கள். நான் மாதாவிடம் மன்றாடினேன். அம்மா என் மகளுக்கு கல்லூரியில் பணம் கட்ட வேண்டும். பணம் என் கையில் வரவேண்டும் என்று கூறினேன். ஜெபமாலை ஜெபித்தேன். என் மன்றாட்டு வீண்போகவில்லை. மாதாவின் அருளால் பணம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

## திருக்குறள்

**அதிகாரம்** : கடவுள் வாழ்த்து

**குறள்** : 2

கற்றதனால் ஆய பயனென்கொல்
வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்.

**பொருள்** : தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

ஜனவரி மாதம் 7 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**∴பிளாரன்ஸ் ஜென்ஸி**

என் குடும்பத்தின் பணத்தேவைகளுக்காகவும் பிள்ளைகளின் நற்படிப்புக்காகவும் மற்றும் என் தேவைகள் குறித்தும் மாதாவிடம் விண்ணப்பித்தேன். மாதா என் கடன் பிரச்சனைகளையெல்லாம் மாற்றி என் குடும்பம் சந்தோஷமாக வாழ அருள்புரிந்தார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**லூர்து மேரி – வேளச்சேரி**

நான் தொடர்ந்து ஜீவமாதாவிடம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றேன். என் சகோதரனுடைய மகளுக்கு குழந்தையில்லை என்று என் அண்ணி அழுது கொண்டிருந்தார்கள். நான் மாதாவிடம் விண்ணப்பித்து ஜெபித்தேன். மேலும் கடந்த மாதம் மாதாவின் கொடியேற்றம் அன்று அவர்களை அழைத்தேன், அவர்கள் மகள் கர்ப்பம் தரித்திருக்கின்றாள் என்று என்னிடம் கூறினார்கள். எனக்கு மிகவும் சந்தோஷம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜோசப் அகஸ்டின் – சேலையூர்**

எனக்கு இரண்டு மகள்கள். முதல் பெண்ணுக்கு திருமணமாகி கருவுண்டானது. அதில் குழந்தை இறந்து பிறந்தது. அதுமுதல் என் மகளுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமலிருந்தது. செயற்கை





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



திருமதி. கேத்தரின் லடாபே என்பவர் 1820 ல் பிரான்சிஸ் நாட்டில் உள்ள லுபாஜெக் என்னுமிடத்தில் பிறந்தார். இவர் அக்டோபர் 1856 ல் மரத்திலிருந்து தவறி விழுந்ததில் அவரது வலக்கையில் காயம் ஏற்பட்டது. உள் நார் நரம்பு முடக்கத்தின் காரணமாக, அவரது முழங்கைக்கு கீழ் செயலற்று, கடைசி இருவிரல்களையும் அசைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகள் இவர் துன்பபட்டுக் கொண்டிருந்தார். ஒரு நாள் அருகில் இருந்த சிறப்புமிக்க அன்னையின் கெபிக்கு செல்ல வேண்டும் என்று உள்ளுணர்வு அவரை தூண்டவே, அதிகாலையில் கெபிக்கு சென்று பெர்னதெத்தை சந்திக்கின்றார். பின்பு அன்னையிடம் மன்றாடி, தனது கையை நீரூற்றில் நனைக்கின்றார். உடனே அவரது கை குணமடைந்து பழைய இயல்பு நிலையை அடைகிறது. அன்று வீடு திரும்பியதும் தனது மூன்றாவது பிள்ளையை பெற்றெடுத்தார். இந்த குழந்தையை கடவுளுக்கு அர்ப்பணித்தார். 1882-ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.கேத்தரின் லடாபே சென்று, ஜெபித்த சிறப்பு மிக்க கெபி "லூர்து அன்னையின் கெபி". பிப்ரவரி மாதம் 11 –ம் நாள் நாம் லூர்து அன்னையின் விழாவைக் கொண்டாடுகின்றோம். பிரான்ஸ் நாட்டில் மூன்று மலைக் குன்றுகள் சூழப்பட்டிருக்கும் அழகிய நகரம் 'லூர்து'. லூர்து நகரில் வாழ்ந்த 14 – வயதுடைய பெர்னதெத் விறகு பொறுக்க சென்றிருந்தபோது "மசபியேல்" என்னும் குகையில் 1858 –ம் ஆண்டு பிப்ரவரி 11 –ம் நாளிலிருந்தே ஜீலை 16 –ம் நாள் வரை 18 முறை மரியா காட்சி கொடுத்தார். இந்த காட்சியை அடிப்படையாக வைத்துதான் "லூர்து அன்னை" என்ற பெயர் வழங்கலாயிற்று. மார்ச் மாதம் 25 – ம் நாள் 16 –வது முறையாக பெர்னதெத்திற்கு காட்சி அளித்தார், அப்போது "நாமே அமல உற்பவம்" என்று தம்மை வெளிப்படுத்தினார். 1862 ஜனவரி 18- ம் நாள்தான் திரு அவை லூர்து அன்னையின் காட்சிகளை அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டது. "ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர் (மத் 11:25) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப சிறுமி பெர்னதெத்திற்கு அன்னை காட்சியளித்தார். எளிய உள்ளம் கொண்டோர்களாக இறைவன் முன்னிலையில் இருக்கும்போது கடவுள் பல வழிகளில் நமக்கு தம்மை வெளிப்படுத்துவார். லூர்து அன்னை நமக்கு விடுக்கும் அழைப்பு "மனமாற்றம்" ஆகவே குழந்தை உள்ளமும் ஆழமான நம்பிக்கையும் கொண்டவர்களாக , அன்னையின் அடிசுவட்டில் வாழ முயல்வோம்.

# குணமளிக்கும் லூர்துநகர் அன்னை

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

அருளால் நிறைந்த மரியே வாழ்க என இறைவனால் அனுப்பப் பெற்ற வான தூதரின் வாழ்த்துரையை நமது அன்னை மரியா இன்றும் உறுதிப்படுத்தியவாறே இருக்கின்றார். அவரின் அற்புத காட்சிகள் அதற்குச் சான்றாகும். 'மகனே இரசம் தீர்ந்து விட்டது' என்று கானாவூரில் தன் மகன் இயேசுவிடம் பரிந்து பேசிய அன்னை இன்றும் தொடர்ந்து நமக்காக நம் தேவையில் எல்லாம் தன் மன்றாட்டை முன் வைக்கின்றார். அம்மன்றாட்டுகள் இறைவனால் கேட்கப்படுகின்றன என்பதை அன்னையின் பெயர் கொண்ட திருத்தலங்கள் பறைசாற்றி வருகின்றன. அவைகளில் ஒன்று பிரான்ஸ் நாட்டிலுள்ள லூர்து நகரில் உள்ள குணமளிக்கும் ஆற்றல் பொங்கி வழியும் அன்னையயின் திருத்தலமாகும். இப்புண்ணிய பூமியில் நமது தாய் மரியா பல காட்சிகள் வழியாக தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். அவற்றை ஆழ்ந்து சிந்திக்கும் போது நாம் உணர்வது: தாயும் தந்தையுமான இறைவன் நம்மைப் பாதுகாக்கின்றார்; நாம் மகிழ்வுடனும் நலமுடனும் வாழ விரும்புகின்றார் என்பதாகும். விண்ணகத் தந்தைக்கும் இந்த மனுக்குலத்திற்கும் இணைப்பாளராக இறைமகன் இயேசு இருக்கின்றார். இதைப் போல அன்னை மரியா அவரது மகனுக்கும் நமக்குமிடையே பரிந்து பேசுபவராக இருக்கின்றார். இத்தகைய உறுதிப்பாட்டுடன் லூர்து நகரின் நாயகியின் காட்சிகளையும் அவை உணர்த்தும் படிப்பினைகளையும் நமதாக்குவோம். ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 11 - ஆம் நாள் லூர்து அன்னையை சிறப்பிக்கும் இத்திருவிழாவில் நமதாண்டவர் இயேசு இயேசுவின் குணமளிக்கும் ஆற்றலை அதிகமாக உணர்வோம்.

**லூர்து நகர்**

வாழ்க, வாழ்க, மரியே வாழ்க என்று ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாடிக் கொண்டும், செபமாலை செபித்தும் பங்கு பெறும் பவனி லூர்து நகரிலுள்ள அன்னையின் திருத்தலத்தின் கண்கொள்ளாக் காட்சியாகும். பிரனிஸ் மலைகளின் அடிவாரத்தில் அமைந்துள்ள உலகிலேயே மிகவும் அழகான இடம் லூர்து நகர் ஆகும். அன்னையின் திருத்தலம் அமைந்துள்ள வளாகம் முழுவதும் இறையருள் நிரம்பி வழிவதை உணரலாம். இந்த வளாகத்தில் நோயாளிகளுக்கான ஒரு மருத்துவ மனை, நிறைய சிறு கோவில்கள், ஒப்புரவு அருட்சாதனம் நிறைவேற்ற ஒரு தனிக் கட்டிடம், அருங்காட்சியகம் மற்றும் பசுமையான திறந்த புல்வெளியில் அமைந்துள்ள கால் பந்தாட்ட இடம் ஆகியவை அமைந்துள்ளன. இந்த திறந்த புல்வெளியின் மத்தியில் அன்னையின் அழகிய ஒரு பெரிய சுரூபம் காணப்படுகிறது. அன்னையின் கண்கள் அவர் பெர்னதெத்துக்கு காட்சி கொடுத்த இடத்தில் அமைந்துள்ள திருத்தலத்தை நோக்கியவாறு இருக்கின்றன. இதனருகில் புகழ் பெற்ற மசபியேல் குகை அமைந்துள்ளது. இதனடியிலிருந்து குணமளிக்கும் நீரூற்று பொங்கி வழிந்தோடுகிறது. ஆயிரக்கணக்கான நோயுற்றோர் இந்நீரைப் பருகியும், பயன்படுத்தியும் குணமடைந்து வருகின்றனர். திருத்தலத்தில் தினமும் திருப்பலிகள் பல மொழிகளில் நடைபெறுகின்றன. நற்கருணைப் பவனியிலும் நோயாளிகள் பங்கு பெற்று வருகின்றனர். ஒவ்வொரு நாளும் நடை பெறும்





நீ உடன் இருக்க
எனக்கு ஓர் ஆசை அம்மா!
இம்மண் உறைவோர் யாவருமே
விண்ணக அரசி உந்தன்
தாயன்பைக் கண்டுணர்ந்து
உம்மைப் போற்றியே புகழ்ந்திடவும்- நும்
சேய்களாக வாழ்ந்திடவும்
எனக்கு ஓர் ஆசை அம்மா!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்

**சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. Google Pay மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை 8122795035 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்**

# எனக்கு ஓர் ஆசை அம்மா

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

அம்மா மரியே! அகிலத்தின் ஆதரவே!
அம்மா!... அம்மா! என
செல்லமாய் உனை அழைத்து
இதமான உன் மடியினிலே
மழைலையாய் முகம் புதைத்து
இமைமூடி சுகம் காண
எனக்கு ஓர் ஆசை அம்மா!

துன்பம் எனைச் சூழும்போது
“துவளாதே கண்மணியே
அம்மா நான் இருக்கின்றேன்
அரவணைத்துக் காத்திடுவேன்”
எனக்கூறும் உன் மொழி கேட்க
எனக்கு ஓர் ஆசை அம்மா!

இறைமகனாம் உன் இயேசு மகன்
நடந்து சென்ற பாதையிலே
கால் பதித்து நடந்திடாமல்
தடம்புரண்டு நான் செல்கையிலே நீ
தடவியே என் கரம் பற்றிக் கூட்டிச் செல்ல
எனக்கு ஓர் ஆசை அம்மா!

வன்முறையும் தீவிர வாதங்களும்
வறுமையும் பல்பிணிகளும் இயற்கைச்சீற்றங்களும்
வையத்தை வாட்டும் நேரம்-உன்
முந்தானையால் எமை மூடிக்காக்க
அரவணைத்து ஆதரிக்க
எனக்கு ஓர் ஆசை அம்மா!
நான் எங்கெங்கு சென்றாலும்
எச்செயலைச் செய்தாலும்
நற்செயலே செய்வதற்கு
என்னோடு என்றென்றும்





செபமாலை பவனியின் இறுதியில் எரியும் திரியினை அன்னையின் பாதத்தில் வைக்கின்றனர். இம்மரபு புனித பெர்னதெததின் காலத்திருந்தே இருக்கின்றது. அன்னை கேட்டுக கொண்டபடி செபமாலை செபித்த பின் எரியும் திரியை ஏந்திச் செல்லும் வழக்கத்தை இப்புனிதை மேற்கொண்டார். இங்கு தான் தன் மகனுக்கு ஒரு ஆலயம் எழுப்ப பெர்னதெத்தைக் கேட்டுக் கொண்டார் அன்னை மரியா.

**சிறுமி பெர்னதெத்**

லூர்து அன்னை காட்சி கொடுத்த பெர்னதெத், 1844 - ஆம் ஆண்டு ஜனவரி 7 - ஆம் நாள் பிரான்சுவா சுப்ரியுஸ், லூயிஸ் காஸ்தேரோ என்று பெற்றோருக்கு மகவாகப் பிறந்தார். இவரது குடும்பம் ஏழ்மையான குடும்பம். எனவே இவர் ஒவ்வொரு நாளும் சமைப்பதற்குத் தேவையான விறகுகளை சேகரிப்பதற்காக அருகிலுள்ள மலையடிவாரத்தில் சென்று வருவது வழக்கம். அவ்வாறு செல்லும் போது ஒரு நாள் மசபியேல் குகையில் ஒரு அழகிய காட்சியைக் கண்டார். குகையின் உள்ளே மேகமூட்டத்துடன் பொன்னிறத்தாலான இளமை தோற்றத்துடன் ஒரு பெண், ரோஜா மலர்கள் மீது நின்று கொண்டிருந்தார். அவருக்கு ஏறக்குறைய 16 வயது இருக்கும். இடுப்பில் நீல நிறக் கச்சையுடன், இரு பாதங்களிலும் மஞ்சள் நிற ரோஜா பூக்களும், அதே நிறத்தில் தங்கக் கம்பியால் கோர்க்கப்பட்ட வெள்ளை நிற மணிகளாலான செபமாலையையும் கரங்களில் ஏந்தியவராக இருந்ததையும் பார்த்தார். இந்நிகழ்வைப் பார்க்கும் போது பெர்னதத்துக்கு வயது 14. தினமும் செபமாலை செபிக்க வேண்டுமென்றும், செப, தபத்தில் ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

**அன்னையின் காட்சிகள்**

பெர்னதெத் இத்தகைய காட்சியை அடிக்கடி கண்டதாக கூறியுள்ளார். அவர் 1858 - ஆம் ஆண்டு பிப்ரவரி 11 லிருந்து ஜூலை 16 ஆம் தேதி வரை அன்னை மரியா பெர்னதெத்துக்கு 18 முறை காட்சி கொடுத்துள்ளார். இவ்வாறு காட்சி கொடுக்கும் போது பெர்னதெத், ‘அம்மா நீர் யார்? என்று கேட்கும் போது 16 - வது காட்சியில் ‘நாமே அமல உற்பவம்’ என்று கூறினார். 1854 - ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் நாள் திருத்தந்தை 9 ஆம் பத்திநாதர் தேவ அன்னை அமல உற்பவி பாவமாசு எதுவுமின்றி உற்பவித்தவர் என்று விசுவாச அறிக்கையாக கூறியிருந்தார். இந்த அறிக்கையை வெளியிட்டு 4 ஆவது ஆண்டு நிறைவுறும் வேளையில் அதை உறுதிப்படுத்தும் வண்ணம் அன்னை, நாமே அமல உற்பவி என்று கூறியது திருச்சபையின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வு ஆகும்.

**புதுமை ஊற்றெடுக்கும் லூர்து நகர்**

உலகின் பல பாகங்களிலிருந்து நோயுற்றோர் நலம் பெற லூர்து அன்னையின் திருத்தலம் நாடி வருகின்றனர். இங்குள்ள நீரூற்று வற்றாத நீரூற்று, சுகமளிக்கும் நீரூற்றாக இருக்கின்றது. இந்தப் புதுமையான நீரூற்றை லூர்து அன்னையே பெர்னதத்துக்குக் காட்டினார். இந்த அரிய காட்சி 1858 - ஆம் ஆண்டு பிப்ரவரி 25 - ஆம் நாள் நிகழ்ந்தது. இக்காட்சியைப் பற்றி பெர்னதெத் பின்வருமாறு கூறுகின்றார். இந்த காட்சியின் போது அன்னை என்னை நோக்கி, அங்கே தெரிகின்ற அருவியில் உன் முகத்தை கழுவிக்கொண்டு நீர் பருகு என்றார். அருவியை நோக்கிப் போகும் போது அங்கு அல்ல என்று சொல்லி மரியா குகையின் தரைப் பகுதியை சுட்டிக்காட்டினார். நான் அங்கே போனேன்; கை வைத்துப் பார்த்தால் தூசி படிந்த தண்ணீர் கொஞ்சம் காணப்பட்டது. குடிப்பதற்கான அளவு இல்லை; கொஞ்சம் தோண்டிப் பார்த்தால் தண்ணீர் கொஞ்சம் கூடுதலாக வந்தது. ஆனால் மண் கலந்து மூன்று முறை அதை கையினால் அள்ளி அகற்றிவிட்டு அடுத்த முறை பருகினேன். அருகில் இருந்தவர்கள் ஏளனம் செய்தனர். காரணம், பருகிய வேளையில் முகமெல்லாம் மண் படிந்து இருந்தது. ஆனால் மாலைப் பொழுதுக்குள் தண்ணீர் பீறிட்டு வரத் தொடங்கியது.

**லூர்து அன்னையின் செய்தி**

நமது அன்னையின் ஒவ்வொரு காட்சியும் தரும் செய்தியிலிருந்து நாம் நிறைய பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம். குறிப்பாக லூர்து அன்னை சிறுமி பெர்னதெத்துக்கு அருளிய காட்சிகளிலிருந்து பின்வரும் சிந்தனைகளை நமதாக்கிக் கொள்வோம். நமது அன்னை எளிய மனநிலையை விரும்புகிறார். திருச்சபையில் அன்னை மரியாவைப் பற்றிய உண்மைகளுக்கு மாறாக தப்பறையான கொள்கைகள் எழும் போது அவற்றை முறியடிக்க திருச்சபை எடுக்கும் முயற்சிகளோடு அன்னை உடனிருக்கின்றார். லூர்து அன்னை, நாம் ஒவ்வொரு நாளும் செபமாலை செபிக்க விரும்புகின்றார். செபிக்கும் போது நாம் அவரை மட்டும் புகழ்வதில்லை. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, உயிர்ப்பு, விண்ணக மாட்சி ஆகிய மறையுண்மைகளையும் ஆழ்ந்து, தியானித்து வாழ்வாக்க நம்மை அழைக்கின்றார். செபத்தோடு தவமும் செய்ய அன்னை அன்புக் கட்டளை விடுக்கின்றார். இக்காலச் சூழலில் தவம் என்பது சுயக்கட்டுப்பாடு என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகின்றார். எனவே சுயக்கட்டுப்பாட்டில் நாம் ஒவ்வொரு நாளும் வளர பயிற்சிக்க வேண்டும். லூர்து நகரில் எண்ணற்ற புதுமைகள் ஒவ்வொரு நாளும் நிகழ்கின்றன. இங்கு லூர்து அன்னை நமது நோய்களை எல்லாம் தீர்த்து வைத்து மகிழ்ச்சியும் ஆறுதலையும் தரும் தாயாகத் திகழ்கின்றார். இந்தப் புதுமைகள் பெரும்பாலும் அங்குள்ள திருத்தலத்தில் நடைபெறும் நற்கருணைப்பவனியில் நிகழ்வதை நாம் கேள்விப்படுகிறோம். நற்கருணை ஆண்டவரின் உயிருள்ள பிரசன்னத்தில் கத்தோலிக்கர்கள் அனைவரும் இன்னும் அதிகமாக, ஆழமாக நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். லூர்து நகரில் அநேக நோயாளிகள் குணம் பெறுகின்றனர். 1901 ஆகஸ்ட் 20ஆம் தேதியன்று புகழ்பெற்ற 60 மருத்துவர்கள் ஒருவரை பரிசோதித்துப் பார்த்ததில் அவருக்கு நடந்த புதுமையை உறுதி செய்தனர். இவருடைய அனுபவங்களை ஏற்றுக்கொண்ட திருச்சபை 1862, ஜனவரி 18 - ஆம் நாள் அதிகாரப்பூர்வமாக லூர்து அன்னையின் காட்சிகளை ஏற்றுக் கொண்டது. லூர்து அன்னை விழா உலகமெங்கும் 1907 - ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்படுகிறது.

**நிறைவுரை**

புதுமைகள் இப்பூமியில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் அழகாக இவ்வுலகில் பிறப்பது ஒரு அதிசயமே. இரவு உறங்கச் செல்லும் நாம் காலையில் உயிரோடு கண் விழிப்பதும் பேரதிசயமே. பயணம் செய்வோர் பாதுகாப்பாக வீடு திரும்புவது இன்று ஒரு ஆச்சரியம். மகிழ்வான, அன்பான, உறவோடு கூடிய இல்லம் அமைவதும் பெரிய ஆச்சரியம். இவ்வாறு அன்றாட வாழ்வில் இறைவன் நம்மோடு பேசுகின்றார். உடன் வழி நடக்கின்றார். உறவாடுகின்றார். அவரது குரலையும், அவரது உடனிருப்பையும் கேட்கவும் உணரவும் நமக்கு இறையருள் தேவைப்படுகிறது. மரியாவைப் போன்று இறையருளில் நிலைத்திருக்க, அவர்தம் காட்சிகளும் அவர் திருத்தலங்களில் நிகழும் புதுமைகளும் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. எனவே புதுமைகளைத் தேடி மட்டுமே நாம் அன்னையை நாடிச் செல்லும் மனநிலையை பரிசோதனை செய்ய வேண்டும். இறைவார்த்தையின்படி நடந்த தன் அன்னையை பேறுபெற்றவர் என்று இயேசு மொழிந்தாரே. அந்த பேறுபெற்றோர் நிலையை அடைய நாம் இறைவார்த்தையை வாசிப்போம். இறைவார்த்தையின்படி வாழ்ந்த மரியா இறையருளில் நிலைத்திருந்து இறைவனுக்கு பணிந்திருந்தார். அர்ப்பண மனநிலையில் வாழ்ந்தா

இறைவனின் திட்டத்தை நிறைவேற்றும் ஒரு கருவியாக செயல்பட்டார். நம்மையும், தொடரும் மீட்புப் பணியில் ஈடுபடுத்த இறைவன் அழைக்கின்றார். அவருக்கு செவிமடுப்போம். அவர் சொல்வதெல்லாம் செய்வோம். மூவொரு இறைவனுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக வாழ நமது லூர்து அன்னை நமக்காக பரிந்து பேசுவாராக. அனைவருக்கும் லூர்து அன்னையின் விழா வாழ்த்துக்கள்.





மரியாவும் யோசேப்பும் தங்கள் குடும்ப கஷ்டங்களை சொல்லி இயேசுவை வளர்த்தார்கள். அதனால்தான் இயேசுவும் குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியைப் புரிந்துகொண்டு தன் தந்தைக்கு அவருடைய தச்சுத் தொழிலில் உறுதுணையாக இருந்தார். இன்று பெற்றோராகிய நாம் நம்முடைய குழந்தைகளுக்கு நம் குடும்ப பின்னணியையும், நம் வாழ்க்கையில் முன்னேறுவதற்காக அனுபவித்த வேதனைகள், துன்பங்கள் அனைத்தையும் செல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். குழந்தைகளுக்கு சொகுசான வாழ்க்கையைத் தரவேண்டும் என நினைத்து அவர்களை சீரழித்துவிடக் கூடாது.

இரண்டாவதாக மரியாவும் யோசேப்பும் தங்கள் மகன் எங்கே இருக்கின்றான், என்ன செய்கிறான், யாரோடு உறவாடுகின்றான்(லூக் 2:45-46) என்பதை அறிந்து வைத்திருந்தார்கள். இன்று நாம் நம்முடைய குழந்தைகளின் இருப்பையும் செயல்பாட்டையும் அறிந்து வைத்திருத்தல் அவசியம். நம்முடடைய குழந்தைகள் எங்கு செல்கிறார்கள், என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள், யாரோடு பழகுகிறார்கள், அலைபேசியில் எந்தெந்த செயலியை பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து கொண்டு அவர்களை அதற்கேற்றபடி நல்வழியில் நடத்த வேண்டும். குழந்தைகளுக்கு தனி அறை கொடுத்து அவர்களுடைய செயலை கண்காணிக்காமல் விடுவது மிகவும் ஆபத்து.

மூன்றாவது மரியாவும் யோசேப்பும் தங்களுடைய வாழ்க்கை முறையினாலும், நடத்தையினாலும் குழந்தை இயேசுவுக்கு முன்மாதிரியாக இருந்து அவரை வளர்த்தார்கள் பெற்றோராகிய நாம் என்ன பேசுகிறோம் , என்ன செய்கிறோம் என்பதை குழந்தைகள் உன்னிப்பாக கவனிக்கின்றார்கள். நாம் செய்வதையும் பேசுவதையும் திரும்பிச் செய்யவும், பேசவும் முயற்சிக்கின்றார்கள். எனவே குழந்தைகளுக்கு அறிவுரை வழங்கி அவர்களை வளர்க்க முயற்சி செய்வதற்குப் பதிலாக நம்முடைய எடுத்துக்கட்டான வாழ்க்கையின் வழியாக அவர்களை நல்வழியில் வளர்க்க வேண்டும்.

இறுதியாக, மரியாவும் யோசேப்பும் குழந்தை இயேசுவை மனிதநேயத்தோடு வளர்த்தார்கள். அந்த மனிதநேயம்தான் இயேசுவை ஏழைகள், பாவிகள், நோயாளிகள், ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோர் மீது இரக்கம் கொள்ளவும், கடைசியில் அனைவருக்காகவும் தன் உயிரையே தியாகம் செய்யவும் தூண்டியது. நாமும் நம் குழந்தைகளை மனித நேயத்தோடு வளர்க்க வேண்டும். இறையன்போடு, பிறரன்பையும் கற்றுக் கொடுக்க வேண்டும். உலக ஞானத்திலும், திறமையிலும் வளர்ப்பதோடு சக மனிதனுக்கு இரக்கம் காட்டி வாழும் மனித நேயத்திலும், பொதுநல நோக்கிலும், தியாக உணர்விலும் வளர்க்க வேண்டும்.

"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
பின் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே"

என்ற தத்துவத்தை உணர்ந்த பெற்றோராய் கடவுள் நமக்கு கொடுத்த குழந்தைகளை தாய் மரியா, புனித யோசேப்பைப் பின்பற்றி நல்லமுறையில் வளர்ப்போம். நல்லுலகைப் படைப்போம்.



## குடும்ப வாழ்வில் மரியா 12

அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச
சோழிங்கநல்லூர், சென்னை

### மரியா குடும்பத்தில் குழந்தை வளர்ப்பு

திருமணம் என்னும் திருவருளடையாளத்தின் நோக்கமாக நம் திரு அவை இரண்டு இலட்சியங்களை வரையறுக்கின்றது. முதலாவதாக திருமணத்தின் வழியாக கணவன் மனைவியாக இணையும் ஆணும் பெண்ணும் ஒருவர் ஒருவரை முழுமையாக அன்பு செய்ய வேண்டும். இரண்டாவதாக தங்களுடைய அன்பின் அடையாளமாக குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு அக்குழந்தைகளை கத்தோலிக்க நம்பிக்கையிலும் நல்ல ஒழுக்கத்திலும் வளர்க்க வேண்டும். திருமண அருளடையாள வழிபாட்டின்போது குருவானவர் கடவுளின் பிரதிநிதியாக இருந்து மணமக்களை பார்த்து, “இறைவன் உங்களுக்கு அருளும் குழந்தைகளை அன்புடன் ஏற்று கிறிஸ்துவின் போதனைகளுக்கும் திருஅவையின் சட்டத்திற்கு ஏற்றபடி வளர்ப்பீர்களா?” என்று கேட்கின்றபோது மணமகனும் மணமகளும், “ஆம், வளர்ப்போம்” என்று தங்களது சம்மதத்தைத் தெரிவிக்கின்றார்கள். குருவானவர் முன்னிலையில் கடவுளுக்கு கொடுக்கும் இந்த சம்மதத்திற்கு கணவனும் மனைவியும் பிரமாணிக்கமாக இருக்க வேண்டும்.

திருமணத்தின் வழியாக ஆணும் பெண்ணும் கடவுளுடைய படைப்பாற்றலில் பங்கெடுக்க அழைக்கப்படுகின்றார்கள். திருமணத்திற்கு பின்பாக குழந்தை இப்பொழுது வேண்டாம் என்று குழந்தைப் பேற்றைத் தள்ளிப் போடுவது பாவமாக கருதப்படுகிறது. காரணம் என்னவென்றால், திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் இணைந்து வாழுகின்றபோது தாம்பத்திய உறவில் ஈடுபடாமல் வாழ்வது கடினம். அப்படி தாம்பத்திய உறவில் ஈடுபடுகின்ற போது பெண்ணானவள் கருத்தரிப்பாள். அச் சூழ்நிலையில் குழந்தை இப்போதைக்கு வேண்டாம் என்று நினைத்தால் அக்குழந்தையை கருவிலேயே அழித்துவிடுவார்கள். கருச் சிதைவு என்பது பெரிய பாவம். எனவே திருமணம் செய்து கொண்டால் குழந்தைப் பேற்றைத் தள்ளிப் போடாமல் குழந்தையைப் பெற்றுக் கொண்டு அக்குழந்தையை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். இதுவே திருமணத்தின் தலையாய நோக்கம்.

மரியா குடும்ப வாழ்வில் குழந்தை வளர்ப்பு என்பது சிறப்பான இடத்தைப் பிடிக்கின்றது. மரியாவும், யோசேப்பும் கடவுளுடைய கொடையாகிய குழந்தை இயேசுவை நல்ல ஒழுக்கத்தோடும் இறை ஞானத்தோடும், தெய்வ பயத்தோடும், இறை நம்பிக்கையோடும் வளர்த்தார்கள்.





## அன்னையின் 50 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### புனித பெரியநாயகி அன்னை ஆலயம்
### ஆவூர் - பகுதி 1

வீரமாமுனிவரின் தமிழ் பணி எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே அளவுக்கு, ஏன் அதைவிட மேலானது அவர் ஆற்றிய சமயப் பணிகள். அதிலும் குறிப்பாக, அவர் கொண்டுவந்து அர்ச்சித்து நிறுவிய அன்னையின் திருஉருவங்கள் தமிழ் மணம் கொண்டு தனித்துவம் வாய்ந்ததாக உள்ளன என்பது நாம் அனைவரும் அறிய வேண்டிய உண்மை. வீரமாமுனிவரால் கொண்டுவரப்பட்ட அன்னையின் திருஉருவங்கள் ஏலாக்குறிச்சி, கோனாங்குப்பம், ஆவூர், அய்யம்பேட்டை அல்லது ஏயலூர் என்றழைக்கப்பட்ட வரதராஜன்பேட்டை முதலிய இடங்களில் இன்று பிரசன்னமாயிருந்து அண்டிவரும் அனைவருக்கும் அருள்பாலித்து வருகிறார் என்பதை நாம் அறிவோம். இவ்வரிசையில் கடந்த மாதம் வரதராஜன்பேட்டை அலங்கார அன்னையின் ஆலயத்தை பற்றி நாம் அறிந்துகொண்டோம். இம்மாதம் தமிழக கிறிஸ்தவ வரலாற்றில் அதிலும் குறிப்பாக இயேசு சபை பணித்தளங்களில் முக்கியமான ஆவூர் பணித்தளத்தையும், அங்கு வீற்றிருந்து அருள்பாளிக்கும் பெரியநாயகி அன்னை பற்றியும் காண்போம்.

கி.பி. 1608ஆம் ஆண்டு தத்துவபோதகர் என்றழைக்கப்பட்ட இராபர்ட் தெ நொபிலி மதுரையில் ஆலயம் ஏற்படுத்தி கிறிஸ்தவ மதத்தை போதித்தார். இவரின் போதனையால் ஈர்க்கப்பட்டு பலர் கிறிஸ்தவர்களானார்கள். இவர்களில் பலர் அரச குடும்பத்தை சார்ந்தவர்களாகவும், அரண்மனையில் பணிபுரிபவர்களாகவும் இருந்தனர். கி.பி. 1623ஆம் ஆண்டு மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு தலைநகரம் மாற்றப்பட்டது. அப்போது, இவர்களும் திருச்சிராப்பள்ளிக்கும், அதன் அருகில் இருக்கும் ஊர்களுக்கும் குடிபெயர்ந்தனர். கி.பி. 1624 மற்றும் கி.பி. 1627ஆம் ஆண்டுகளில் தத்துவபோதகர் திருச்சி வந்து இவர்கள் மத்தியில் மறைபணியாற்றினார். இவர்களில் பலர் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள ஆவூரிலும் குடியேறினர். இங்ஙனம், இப்பகுதியின் முதல் கிறிஸ்தவ மக்கள் வசிக்கலாயினர். கி.பி. 1682ஆம் ஆண்டு இயேசுசபை குருவானர் இங்கு வந்து இவர்களுக்கு மறைப்பணியாற்றினார். அத்துடன், பல மக்களை கிறிஸ்த மறையை தழுவ செய்தார். இப்பகுதியின் ஆளுநராக இருந்த கத்தலூர் தேவர், ஆவூர் ஒரு கூரைகோயில் கட்டிக்கொள்ள அனுமதியளித்தார். இங்ஙனம், ஆவூர் முதல் ஆலயமானது கி.பி. 1682ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இந்த ஆலயம் இருந்த இடம் பழைய ஆவூர் என்றழைக்கப்படுகிறது. பழைய மதுரை மிசனில் இருந்த 12 பங்குகளில் ஒன்றாக இது இருந்துள்ளது. கி.பி. 1682லிருந்து இது பங்காகவும் உள்ளது.

கடந்த 340 ஆண்டுகளாக இயங்கிவரும் இந்த பங்கு திருஅவையில் ஏற்பட்ட பல மாற்றங்களையும் கண்டுள்ளது. கி.பி. 1682 - கி.பி. 1793 காலக்கட்டத்தில் பத்ரோவாதோ அமைப்பின் கீழ் இயேசு சபையினரால் வழிநடத்தப்பட்டது. கி.பி. 1794 - கி.பி. 1838ஆம் ஆண்டு வரை இரட்டை ஆட்சி நடைபெற்றது. அதாவது, இயேசு சபை தடைசெய்யப்பட்டதால், திருத்தந்தையின் ஆணைக்கிணங்க பாரீஸ் வேதபோதக சபையினரின் ஆளுகைக்கு கீழ் ஆவூர் வந்தது. அதே நேரத்தில் மைலாப்பூர் ஆயரின் கீழ் இயங்கிய பத்ரோவாதோ அமைப்பின் கீழ் மற்றொரு ஆலயமும் இங்கு செயல்பட்டது. இந்த ஆலயத்தின் பகுதிகளை இன்றும் பங்கு குருவானவரின் இல்லத்தின் அருகில் காணலாம். கி.பி. 1838 முதல் கி.பி. 1928 ஆம் காலக்கட்டத்தில் புதிய மதுரை மிசனின் கீழ் இந்த ஆலயம் செயல்பட்டது. அதே நேரத்தில் மைலாப்பூர் பத்ரோவாதோ குருக்களும் அவர்கள் ஆலயத்தில் செயல்பட்டனர். கி.பி. 1928 முதல் கி.பி. 1938ஆம் ஆண்டு வரை ஒரே குருவானவாரின் கீழ் இயேசு சபையினரால் நிர்வகிக்கப்பட்ட திருச்சி மறைமாவட்டத்தின் கீழ் செயல்பட்டது. கி.பி. 1938ஆம் ஆண்டு முதல் புதிய திருச்சி மறைமாவட்டத்தினரால் இப்பங்கானது இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கி.பி. 1683 முதல் கி.பி. 1691 வரை அருட்பணி. லூயிஸ் தெ மெல்லோ என்ற இயேசுசபை குருவானவர் பங்குத் தந்தையாக இருந்தார். மறவநாட்டு அதிகாரியால் சிறைப்படுத்தப்பட்ட இவரை இராணி மங்கம்மாவின் சிபாரிசினால் புனித அருளானந்தர் சிறையிலிருந்து விடுவித்து அழைத்து வந்தார். சிறையிலிருந்து மீண்ட இவர் சிறிது காலத்திலேயே நோய்வாய்பட்டு, இரண்டு குருக்கள் அருகிலிருக்க ஆவூரிலேயே இறந்தார். பழைய ஆவூரில் உள்ள 'ஐந்து குருமார்கள்' கல்லறையில் இவர் கல்லறையும் ஒன்று. மற்ற நால்வரின் பெயர்கள் தற்போது நமக்கு தெரியாமல் போனது மிகப்பெரிய வருத்தத்திற்கு செய்தியாகும்.

இவருக்கு பின் பணியேற்ற பெரிய சஞ்சீவிநாதர் என்றழைக்கப்பட்ட, அருட்பணி. வெனான்சியுஸ் புசே கி.பி. 1691லிருந்து கி.பி. 1702ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். இவர் காலத்தில்தான், கி.பி. 1682ஆம் ஆண்டு கட்டப்பட்ட சிறிய குடிசை கோயில் மக்களின் எண்ணிக்கைக்கு உகந்ததாக இல்லாமல் போனதால், கி.பி. 1697ஆம் ஆண்டு கோவில் தோப்பு என்று சொல்லப்பட்ட பழைய ஆவூரில் புதிய ஆலயம் ஒன்று சுண்ணாம்பினாலும், கற்களாலும் கட்டப்பட்டது. இவர் சுற்றியிருந்த 30 கிராமங்களுக்கு கால்நடையாகவே சென்ற கிறிஸ்துவை போதித்தார். கி.பி. 1702ஆம் ஆண்டு கர்நாடிக் மிசன் தலைவராக உயர்த்தப்பட்டு பாண்டிசேரிக்கு சென்றார். தான் பணியாற்றிய 12 ஆண்டுகளில் முப்பதாயிரம் பேருக்கு இவர் திருமுழுக்கு அளித்தார். இவர்தான், சுரூபங்களை வைத்து பாஸ்கா கொண்டாடங்களை ஆவூரில் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கி.பி. 1703ஆம் ஆண்டு முதல் கி.பி. 1740 ஆம் ஆண்டு வரை ஆவூர் ஞானப்பிரகாசியார் என்றழைக்கப்பட்ட அருட்பணி. சார்லஸ் மைக்கேல் பெர்தோல்டி அவர்கள் ஆவூரின் பங்குத் தந்தையாக இருந்தார். இவர் காலத்தில் தான், கி.பி.1693ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் நாள் அருளானந்தர் மறைசாட்சியாக மரித்தபோது, மதுரை மிசன் தலைவராயிருந்து அருட்பணி. பிரான்சிஸ் லேயினஸ் அடிகளார் அவர்கள் தன் தாய்நாடான போர்ச்சுகலுக்கு சென்றிருந்த போது, கி.பி. 1708ஆம் ஆண்டு மயிலாப்பூர் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். இவர், கி.பி. 1711ஆம் ஆண்டு ஆவூருக்கு பங்கு விசாரணைக்கு வந்து ஐந்து மாதங்கள் தங்கி தன் பணிகளை நிறைவேற்றினார். இக்காலத்தில் புதுக்கோட்டை தொண்டைமான் அரசர் ஆவூருக்கு விசயம் செய்து, ஆயரை தனிமரியாதையுடன் சந்தித்து சென்றார்.

ஆவூரும், திருச்சியும் சேர்ந்து ஒரு பெரிய பங்காக இருந்ததால், எப்பொழுதும் ஒரு உதவி குருவானவர் இருப்பார். பல நேரங்களில் அருட்பணி. சார்லஸ் அவர்கள் அவ்வமயம் ஏலாக்குறிச்சியில் இருந்த வீரமாமுனிவரை





கருதலாம். ஊனைச் சார்ந்த முறையில் அன்று இவ்வுலகில் தங்களுக்கு இல்லாத கணவனுக்கு இழப்பீடாக மாற்றுக் கணவனாக அவரை கற்பனை செய்து கொண்டு அவரிடம் அன்புறவு கொள்வது சரியான ஆன்மீகம் அன்று. அதுபோலவே மரியாவையும் அவரது பக்தர்கள் இவ்வுலக அன்னையாக எண்ணி அவர்பால் ஊனியல்பு தாய்க்குரிய பாசத்தை செலுத்துவதை உண்மையான மரியா பக்தி என நாம் கருத இயலாது.

இறை உறவோ, புனிதர்களது உறவோ, நம் இவ்வுலக உறவுகளுக்கு மாற்றோ இழப்பீடோ அல்ல. மாறாக இவ்வுலக நல் உறவுகளுக்கு அவை தூண்டுதலும் துணையும் ஆகி அவற்றை வளர்க்க வேண்டும். அப்போதுதான் அவை உண்மையான அருள் உறவுகள் ஆகின்றன மேலும் இவ்வுலக உறவுகளுக்கு இழப்பீடு இவ்வுலக உறவுகளே அன்றி வானக உறவுகள் அல்ல. தாயில்லாக் குழந்தைக்கு இன்னொரு உறவுப் பெண்ணோ உதவி பெண்ணோதான் தாயாக இருக்க முடியும் என நான் நினைக்கிறேன. இறைவனோ அல்லது மரியாவோ வந்து அதற்கு இவ்வுலகத் தாயாக இருந்து, பாலூட்டி வளர்ப்பார்கள் என நாம் எதிர்பார்ப்பது இல்லை. எனவே மரியாவும் உலக அல்லது ஊனியல்பு முறையில் இயேசுவுக்கு மட்டுமே தாய். நமக்கு அல்ல. அவர் நம் தாய் என்றால் அது உருவக முறையிலும் அருள் முறையிலும்தான். ஆம் மரியா நம் விசுவாசத் தாய், நம்பிக்கையின் தாய், விண்ணக அன்னை. இதனால் மரியாவுக்கு நம்முடன் உள்ள தாய்மை உறவை மரபு இறையியல் "ஆன்மீகத் தாய்மை" என்று அழைத்தது. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கமும், அதனை "அருள்முறையிலான தாய்மை", "அருட்திட்டத்தில் தாய்மை" என்றே குறிப்பிடுகிறது. (காண் திருச்சபை 61,62)

மரியாவின் அருள் தாய்மை வெறும் சிறப்போ அல்லது பெருமையோ அல்ல. மாறாக அது ஒரு பணி எனவேதான் "தாய்மைக்குரிய பணி" என அதனை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் வருணிக்கிறது. மரியாவின் தாய்மையின் முக்கிய பணி யாது? அது இறையரசு செய்யும் நம் நம்பிக்கைப் பயணத்தில், விடுதலைத் தேடும் நம் வாழ்வு பயணத்தில் நம் உடன் இருந்து, ஊக்கம் தந்து, மாதிரியாக நின்று, உதவி அருளுவதாகும். எனவே எந்த அளவு ஒருவர் மரியாவின் வீர விசுவாசத்திலும், இறையரசுக்கான தன்னர்ப்பணத்திலும் பங்கு எடுக்கின்றார்களோ அந்த அளவுக்குத்தான் மரியாவை தன் தாயாக கொண்டிருக்கின்றனர் என கருத முடியும்.

அதுபோலவே "அவள் உண்மையில் கிறிஸ்தவ உறுப்பினர்களுக்குத் தாய்" என்று அழைக்கின்றார் புனித அகுஸ்தினார்.

இயேசு நம் சகோதரர் என்பதால் அவருடைய தாய் மரியா நமக்கும் ஒருவகையில் தாயே என்னும் கருத்தை 7,8ம் நூற்றாண்டுகளில் பல சிந்தனையாளர்கள் எடுத்துரைக்கின்றனர். இக்காலத்திற்கு பின்பு, அதிலும் 11-12 ம் நூற்றாண்டுகளில் தாய் மரியாவை கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்தத் தாய் என கருதுவதும் அவர்பால் அன்பு, பக்தி, பாசம் செலுத்துவதும் மிக பரவலாயிற்று. நம் தாயாக நின்று மரியா அன்புடன் நம்மை ஆதரிப்பவர், பாதுகாத்து பராமரிப்பவர், நமக்காக பரிந்து பேசுபவர் என்னும் சிந்தனைகளும் பக்திமுறைகளும் இந்த இடைக்காலத்திலிருந்துதான் முன்னணிக்கு வந்தன.

15 ம் நூற்றாண்டிலிருந்தே திருத்தந்தையர்கள் பலர் மரியாவை கிறிஸ்தவர்களின் தாய் எனக் குறிப்பிட்டுள்ளனர். இரண்டாம் வத்திகான் சங்கமும், "இவர் கிறிஸ்துவின் தாய், மக்களின் தாய், சிறப்பாக விசுவாசிகளின் தாய் எனக் கூறுகிறது. (திருச்சபை 54,69). கிறிஸ்தவர்களின் தாய் என்று மட்டுமல்ல, மக்களின் தாய் என்று சங்கம் மரியாவை குறிப்பிடுவது கத்தோலிக்க மரியியல் சிந்தனையின் வளர்ச்சி எனலாம்.

**எத்தகைய தாய்மை இது?**

தாய்மை பல வகைப்படும். அவற்றுள் முக்கியமானவை ஊனியல்புத் தாய்மை, தத்தெடுப்புத் தாய்மை, உருவகத் தாய்மை, அருள் அல்லது ஆன்மீகத் தாய்மை என்பன ஆகும். மரியா பக்தர்கள் அவரை தாயென அணுகி அன்பு செய்யும்போது எத்தகைய தாயாக அவரை கருதுகின்றனர்? ஊனியல்புக்கே உரிய ஓர் உறவு முறையையே அவர்கள் கற்பனை செய்து கொள்கிறார்களோ தங்களைப் பெற்ற தாயிடம் காட்டும் அதே வகையான பாசத்தையே அவர்கள் மரியாவிடம் காட்டுகின்றார்களோ? என கேட்கும் வகையில்தான் பல வேளைகளில் அவர்களின் பக்தி பாவனைகளும் வணக்கமுறைகளும் அமைந்துள்ளன. இவ்வாறு மண்ணக அன்னைக்கு மாற்று அன்னையாக இழப்பீடாக மரியாவை கருதுவது நல்ல பக்திமுறை என நாம் ஏற்க இயலாதது. ஏனெனில் இது உண்மையான உளப்பக்குவத்திற்கும் ஏனைய உறவுகளுக்கும் ஊறு விளைவிப்பது மட்டுமன்று இறையியல் அடிப்படையிலும் முறையற்றதே.

பின்வரும் எடுத்துக்காட்டு நாம் இதனை புரிந்துகொள்ள உதவும் பெண்துறவியர் இயேசுவை அருள்முறையில் தங்கள் மணவாளனாக





உதவிக்கு அழைப்பதுண்டு. அங்கு வரும் வீரமாமுனிவர், இயேசு சபையைத் தோற்றுவித்த புனித இஞ்ஞாசியாரின் 'ஞானமுயற்சிகளை' தெள்ளத் தெளிவான தமிழில் மக்களுக்கும், குறிப்பாக வேதியர்களுக்கு போதித்து வந்தார். கி.பி. 1708ஆம் ஆண்டு பெருவெள்ளத்தின் போதும், கி.பி. 1709ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியின் போதும் ஆவூர் ஞானப்பிரகாசியார் என்றழைக்கப்பட்ட அருட்பணி. சார்லஸ் தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் மக்களுக்கு செய்தார்.

பழைய ஆவூர் அருகே செல்லும் கோரை ஆற்றின் கிளை நதியில் அடிக்கடி வெள்ளம் ஏற்படவே, மக்கள் ஆலயத்திற்கு வர இயலாமற்போனதை கண்டு, இன்று இருக்கும் இடத்தில் ஆலயம் கட்ட ஏற்பாடு செய்தவரும் சார்லஸ் அடிகளார் அவர்களே. கி.பி. 1740 மார்ச் மாதம் 10நாளன்று தன் 80 வயதில் இவர் இறைவனடி சேர்ந்தார். ஆவூர் நந்தவனத்தில் உள்ள முதல் கல்லறை இவருடையதாகும்.

அருட்பணி. சார்லஸ் பெர்தோல்தியின் பணிக்காலத்திலேயே மூன்றாண்டுகள் வீரமாமுனிவர் கி.பி. 1726 முதல் கி.பி. 1729ஆம் ஆண்டு வரை ஆவூரில் பணியாற்றியிருக்கிறார். பின், கி.பி. 1732-33ஆம் ஆண்டளவில் ராணி மீனாட்சிக்கும் பங்காரு திருமலைநாயக்கருக்கும் உள்நாட்டு போர் நடந்பொழுது, ஆவூர் பகுதிகளிலும் போர் நடைபெற்றது. அப்போதும், வீரமாமுனிவர் அருட்பணி. சார்லஸ் அவர்களுக்கு உதவியாயிருக்க ஆவூர் வந்திருந்தார். அக்காலத்தில் கப்பம் வசூலிக்க வந்த ஆற்காட்டு படையினர் ஆவூர் அருகே முகாமிட்டு இருந்தனர். அவர்களின் மாடுகள் களவாளப்பட்டன. அதை ஆவூரை சேர்ந்தவர்கள் களவாடினர் என்றெண்ணி, சோதனையிட வந்த வீரர்கள் வீரமாமுனிவரை கைது செய்து கொண்டு போனார்கள். தங்கள் படைத்தலைவரிடம் போகும் வழியில் பலவிதமான கொடுமைகளை வீரமாமுனிவருக்கு அளித்தனர். கொடுமையான வெயிலில் காக்க வைத்தனர். படைத்தளபதியான சந்தா சாஹிப் முனிவரை கண்டவுடன் அதிர்ச்சியடைந்தார். அவரை தன்னுடன் அழைத்து சென்று மிகப் பெரிய மரியாதைகளைச் செய்தார். அதைக் கண்ட வீரர்கள் வெட்கித் தலைக்குனிந்தனர். பின், காவலர்கள் புடைச்சூழ, வீரமாமுனிவரை பல்லக்கில் அனுப்பிவைத்தார். ஆவூர் ஆலயத்தின் பாதுகாப்பிற்காக அங்கு தன் கொடிகளையும் கொடுத்தனுப்பினார். இங்ஙனம், வீரமாமுனிவர் சந்தா சாஹிப்பை சந்தித்தது ஆவூர் அருகில்தான் நடைபெற்றது.

இக்காலக்கட்டத்தில், வீரமாமுனிவர் தன் வழக்கப்படி, அன்னையின் திருஉருவத்தை இங்கு ஸ்தாபித்தார். வீரமாமுனிவர் தான் பணியாற்றுகிற இடத்திலிருந்து பணியிடம் மாறி செல்கிற போது அன்னையின் திருஉருவத்தை ஸ்தாபித்து, அவ்விடத்தை அன்னையின் பராமரிப்பில் விட்டுச் செல்வது வழக்கமாக கொண்டிருந்தார். அவ்வகையில், ஆவூர் அவர் ஸ்தாபித்த அன்னையின் திருஉருவம் இந்திய பெண் உருவத்தோற்றத்தில் கரங்களை கூப்பியவராக காணப்படுகிறார்.

கி.பி. 1740 - 1745 ஆண்டுகளில் அருட்பணி. பிரான்சிஸ் ஹோமம் என்கிறவர் பங்குப் பணியாளராக இருந்தார். இவர் அருட்பணி. சார்லஸின் விருப்பப்படி, பழைய ஆவூரிலிருந்து 4 கி.மீ தொலைவிலிருந்த புதிய ஆவூரில் வீடுகளை கட்டி மக்களை குடியமர்த்தினார். ஏறக்குறைய கி.பி. 1752ல் இவர் இறைவனடி சேர்ந்தார். நந்தவனத்தில் அருட்பணி. சார்லஸ் அருகில் அடக்கம் செய்யப்பட்டார்.

கி.பி. 1745-1751 வரை மதுரேந்திரர் சுவாமி என்றழைக்கப்பட்ட அருட்பணி. பிரான்சிஸ் கிளமெண்ட் தொம்மாசினி ஆவூரின் பங்குப் பணியாளராக இருந்தார். இவருடைய காலத்தில் கொள்ளையடிக்க வந்த மராட்டியர்கள் ஆவூர் கோயிலுக்கு தீவைத்தனர். தீயினால் சிதிலமடைந்த கோயிலை, இவர் காறைக்கட்டு கோயிலாக கட்ட தீர்மானித்து, கி.பி 1747ஆம் ஆண்டு ஆகஸ்டு 10நாள் அடிக்கல் நாட்டினார். இன்றுள்ள கோயிலின்

முதல் படி இதுதான். அன்று புனித லாரன்ஸ் திருநாள். இவருடைய காலத்தில் சிலுவை வடிவில் கட்டப்பட்ட சிறிய கோயில் பின் படிப்படியாக விரிவாக்கப்பட்டு இன்றுள்ள நிலையை அடைய 55 ஆண்டுகள் ஆயின. கி.பி. 1751ஆம் ஆண்டு மத்தியில் மதுரேந்திரர் சுவாமி வடக்கன்குளத்திற்கும், வடக்கன்குளத்தில் பணியாற்றிய பெரிய பரஞ்சோதியார் என்றழைக்கப்பட்ட அருட்பணி. ஜான் பாப்டிஸ்ட் புட்டாரி என்பவர் ஆவூர் பணியிடமாற்றம் பெற்றனர்.

பெரிய பரஞ்சோதியார் கி.பி. 1751 முதல் கி.பி. 1757 வரை ஆவூரில் பணியாற்றினார். இவர்தான் புனித தேவசகாயம் பிள்ளை அவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்தவர். ஆறு ஆண்டுகால பணிக்குபின் இவர் ஆவூரில் கி.பி. 1757ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் தேதி இறையடிச் சேர்ந்தார். இவரும் ஆவூரிலேயே அடக்கம் செய்யப்பட்டார். இவரின் கல்லறையை புனித தேவசகாயம் அவர்களின் மனைவி ஞானப்பூ வந்து சந்தித்துவிட்டு சென்றதாக பாரம்பரிய செய்திகள் உள்ளன. இவருக்கு பின் சிறிது காலம் பங்குப் பணியாளராக பணியாற்றிய பிரான்சிஸ் பயஸ் அடிகளாரும் இறையடிச் சேர்ந்து ஆவூரிலேயே அடக்கம் செய்யப்பட்டார்.

கி.பி. 1757 முதல் கி.பி. 1789 வரை 32 ஆண்டுகள் தர்மநாதசுவாமி என்றழைக்கப்பட்ட அருட்பணி. பீட்டர் மாசத்தோ அவர்கள் ஆவூர் மற்றும் திருச்சி பங்குகளை இணைத்து பராமரித்து வந்தார். கி.பி. 1766ஆம் ஆண்டு 50 அடி உயரமுள்ள கெட்டிமூங்கில் மரத்தால் தேரை உருவாக்கி பாஸ்கு திருவிழாவின் மூன்றாம் நாளன்று தேர் சுற்றுப்பிரகாரத்தை தொடங்கினார். இத்தேர் சுற்றுப்பிரகாரம் இன்றளவும் நடைபெறுகிறது. ஆவூர், திருச்சி பணித்தளங்களை பராமரித்த தர்மநாதர்சுவாமி கி.பி. 1789ஆம் ஆண்டு ஜீன் 25ஆம் தேதி திருச்சியில் இயற்கை எய்தினார். அடுத்த நாள் இவர் ஆவூரில் அடக்கம் செய்யப்பட்டார்.

ஆவூர் சரித்திரத்தை புரிந்துகொள்ள உலக திருஅவையின் வரலாற்றை நம் நினைவில் கொள்வது நலம். கி.பி. 1759ஆம் ஆண்டு இயேசு சபை போர்த்துகல் நாட்டில் தடை செய்யப்பட்டது. தொடர்ந்து பிரான்ஸ், ஸ்பெயின், நேப்பிள்ஸ் நாடுகளிலும் தடைசெய்யப்பட்ட இயேசு சபை, கி.பி. 1773ஆம் ஆண்டு திருத்தந்தையால் உலகமெங்கும் தடைசெய்யப்பட்டது. பின், வேதபோதக பரப்பு ஆணையத்தால் கி.பி. 1774ஆம் ஆண்டு பிரெஞ்சு அந்நிய வேதபோதக சபை ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் பராமரிப்பில், போர்த்துகீசிய பராமரிப்பில் இருந்த மதுரை மிசனும், பிரெஞ்ச் பராமரிப்பில் இருந்த கர்னாடிக் மிசனும் ஒப்படைக்கப்பட்டது. இதற்கு எதிராக, போர்த்துக்கல் அரசரின் தூண்டுதலால் கோவை ஆயர் மதுரை மிசனிலும், தூத்துகுடி கடற்கரை பகுதியிலும் பத்ரோவாதோ குருக்களை பணிசெய்ய அனுப்பினார். எனவே, திருஅவையில் இரட்டை ஆட்சிமுறை ஏற்பட்டு பல்வேறு குழப்பங்களுக்கு வழிவகுத்தது. அப்படியாக, ஆவூர் வந்த கோவை குருக்கள்தான் கத்தனார் குருக்கள் என்றழைக்கப்பட்டனர்.

கி.பி. 1790ஆம் ஆண்டில், இயேசு சபையை சார்ந்த இரண்டு குருக்கள் புதுச்சேரி பிரெஞ்ச் ஆயருக்கு கீழ் பணிபுரிந்தனர். அருட்பணி. ஜீன் பெர்ரேரா மற்றும் அருட்பணி. சேவியர் தே அந்திரேயா என்கிற அவர்கள் ஆவூரில் ஏறக்குறை மூன்றாண்டுகள் பணிபுரிந்தனர். கி.பி. 1794ல் பிரெஞ்ச் அந்நிய வேதபோதக சபையைச் சார்ந்த அருட்பணி. மோதேத் என்கிறவர் ஆவூரில் பணியாற்றினார். கி.பி. 1795ஆம் ஆண்டு பிரெஞ்ச் அந்நிய வேதபோதக சபையைச் சார்ந்த புதுச்சேரி பேராயர் நிக்கோலஸ் சாம்பியனோஸ் அவர்கள் ஐந்து குருக்களுடன் வந்து திருச்சி, ஆவூர் மற்றும் புறத்தாக்குடி பகுதிகளில் மறைபரப்பு பணியாற்றினர். ஆனால், கத்தனார் குருக்களின் எதிர்ப்பால் அவர்கள் தங்கள் பணிகளை தொடர முடியாமல் திரும்பினர். இங்ஙனம், ஆவூரில் கத்தனார் குருக்களின் அதிகாரம் ஓங்கியிருந்தது.

கி.பி. 1798ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1818ஆண்டு வரை பெரிய யாகப்பர் என்கிற கத்தனார் சுவாமி, மலையாள சிரீயன் குருவானவர், ஆவூரின்





# மரியா - கடவுளின் கடிதம்



19

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## நம் தாய்

கத்தோலிக்க மக்கள் மரியாவை தங்கள் சொந்த தாயாக அணுகி அன்பு செய்கின்றனர், வாழ்த்தி வணங்குகின்றனர். தேவைகளில அவரது உதவியை நாடுகின்றனர். மரியாவை தங்கள் செபங்களிலும் பாடல்களிலும் “அம்மா”, “தாயே”, “மாதாவே”, “அன்னையே”, என அழைப்பதுவே அவர்களது பரவலான பாணியாக திகழ்கின்றது. ஆனால் பொதுவாக சீர்திருத்தச் சபையினர் மரியாவை தங்கள் சொந்த தாயாக இந்த வகையில் ஏற்றுக் கொள்வது இல்லை. அவர் இயேசுவின் தாய். அவரை நம் தாயாகக் கருத விவிலியத்திலோ கிறிஸ்தவ துவக்க மரபிலோ எவ்வித அடிப்படையும் இல்லை என்பது அவர்களது கருத்து. மேலும் இறைவனே நமது தந்தை. மரியாவோ வெறும் மானிடப் பிறப்பே. அவரை நம் தாய் என்று அழைப்பது கடவுளின் நிலைக்கு அவரை உயர்த்துவதுமானது என்பது அவர்களின் கேள்வி.

மரியா நம் தாய் என்று எங்குமே விவிலியத்தில் வெளிப்படையாக சொல்லப்படவில்லை. ஆனால் சிலுவையில் இயேசு தம் தாயை தம் அன்புச் சீடருக்கு தருகின்றார். (யோவான் 19,25-27) அந்த அன்புச் சீடர் தனி ஒரு சீடர் மட்டுமன்று. இயேசுவின் அன்புச் சீடா ஒவ்வொருவருக்கும் அவர் உருவகம் என்பதுவே பெருவாரியான விவிலிய ஆய்வாளர்களின் விளக்கம். இந்த அடிப்படையில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தாயே என்பதுவே கத்தோலிக்க கிறிஸ்தவ மரபில் வாழும் நம்பிக்கை.

திருச்சபை தந்தையர் எவரும் கிறிஸ்தவர்களின் தாய் என்னும் சிறப்புப் பெயரால் மரியாவை குறிப்பிடவில்லை. இருப்பினும் இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே அவர்களுள் பலர் ஏவாளையும் மரியாவையும் ஒப்புமைப் படுத்திப் பார்க்கின்றனர். ஏவாள் எல்லா மனிதருக்கும் தாய், அதுபோல மரியா விசுவாசிகள் அனைவரின் தாய் என்னும் கருத்து இதில் அடங்கியுள்ளது. இப்பொருளில் தான் மரியாவை “வாழ்வோரின் தாய்” என 4ம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித எபிபானுசு அழைக்கின்றார்.



# முத்திப்பேறு சியன்னா நகரத்து ஜோவாக்கிம்

O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

நமது முத்திப்பேறு ஜோவாக்கிம் 1258 ஆம் ஆண்டு சியன்னா நகரத்தில் பிறந்தார். இவருடைய பெயர் கியாரமோந்தே (Chiaramonte). 14 ஆம் வயதிலே மரியின் ஊழியர் சபையில் சேர்ந்தார். இவர் சிறுவயதில் இருந்தே மரியாள் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்ததால், சபையில் சேர்ந்தவுடன், மரியாளின் தந்தையின் பெயரான ஜோவாக்கிமை தன்னுடைய பெயராக மாற்றிக்கொண்டார். அவருடைய வாழ்நாள் எல்லாம் ஒரு வருடம் தவிர (ஒரு வருடம் மட்டுமே அரேட்ஸோ (Arezzo) என்ற நகரில் உள்ள மரியின் ஊழியர் இல்லத்தில் வாழ்ந்தார்), சியன்னா நகரத்தில் உள்ள மரியின் ஊழியர் இல்லத்தில்தான் வாழ்ந்தார். நோயாளிகளை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் தருவதே இவருடைய முக்கியமான இறைப்பணியாக இருந்தது. இவ்வாறு ஒருநாள் அவர் வலிப்பு நோய் இருந்த ஒரு நோயாளிக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருந்த போது, அந்த நோயாளி அவரிடம், அன்பான தந்தையே, ஆறுதல் கூறுவது எளிது ஆனால் இந்த நோயை உடலில் சுமப்பது அவ்வளவு எளிது அல்ல என்று கூறினார். அந்த நேரத்திலே, ஜோவாக்கிம் இந்த நோயாளியின் வலிப்பு நோய் அவருக்கு வருமாறு இறைவனிடம் வேண்டினார். இதனால், அந்த நோயாளி குணமாக்கப்பட்டார், ஜோவாக்கிம் தனது இறப்புவரை இந்த வலிப்பு நோயை தன் உடம்பில் சுமந்தார். சில ஆண்டுகள் கழித்து வலிப்பு நோயின் காரணமாக அவருடைய உடம்பில் பல புண்களும் வர ஆரம்பித்தன. இருந்தாலும் அனைத்தையும் தாங்கிக்கொண்டார். தான் உயிரோடு இருக்கும் பொழுதே, பல புதுமைகளை செய்தார். அதிகமான நோய்களின் காரணமாக, 1306 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் நாள், தன்னுடைய 47 ஆம் வயதிலேயே, இறைவனடி சேர்ந்தார். இறைமகன் இயேசுவின் பாடுகளில் பங்கெடுக்க எப்போதும் ஆவலாய் இருந்த நமது ஜோவாக்கிம், புனித வெள்ளி அன்றே இறக்க விரும்பினார். அதேபோல், சகோதரர்கள் புனித வெள்ளி சடங்குகளை செய்து கொண்டிருக்கும்போதே இறைவனடி சேர்ந்தார். சியன்னா நகரில் அவர் இறந்த 5 ஆண்டுகளுக்கு பின், அதிகமான புதுமைகள் அவருடைய மன்றாட்டுகளின் பெயரால் நடந்ததால், மக்கள் அவரை புனிதராகவே கருதி, வணக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். 1606 ஆம் ஆண்டு திருத்தந்தை ஐந்தாம் சின்னப்பர் ஜோவாக்கினுக்குரிய வழிபாட்டு முறைக்கு ஒப்புதல் அளித்தார். இன்றும் குழந்தை பிறந்தவுடன் ஜோவாக்கினின் பீடத்திற்கு முன்பாக வந்து ஆசிர்வாதம் பெற்று செல்வது வழக்கமாக உள்ளது. மேலும், முத்திப்பேறு ஜோவாக்கின் வலிப்பு நோய் உள்ளவர்களின் பாதுகாவலராக உள்ளார்.







பங்கு பணியாளராக சிறப்பாக பணியாற்றினார். கி.பி. 1747ஆம் ஆண்டு மதுரேந்திரர் சுவாமி அவர்கள் கட்டிய சிலுவை வடிவிலான சிறிய கோயிலை கி.பி. 1801ஆம் ஆண்டு பெரிய கோவிலாக கட்டிமுடித்தார். பல்வேறு சமூகத்தினர் அமர தெற்கு, வடக்கு மற்றும் புனித மைக்கேல் மண்டபங்களை கட்டினார். ஆலய மையக்கோபுரத்தையும் அழகுற நிர்ணயித்தார். பாஸ்கா காணவரும் அனைவருக்கும் உணவு, தண்ணீர், தங்குமிடம் போன்றவற்றை தர்மசிந்தனை உடையோர் அளிக்க ஏற்பாடு செய்தார். கி.பி. 1802ஆம் ஆண்டு மூங்கில் மரத்தாலான தேருக்கு பதிலாக நல்ல வைரம் பாய்ந்த மரத்தில் பல்வேறு புனிதர்களின் உருவங்களையும், விவிலிய நிகழ்வுகளையும் சுட்டிகாட்டும் சிற்பங்கள் நிறைந்த தேரை செய்ய ஆரம்பித்தார். இப்பணியானது அருட்பணி. பவுல் என்பவர் காலத்தில் கி.பி. 1820ல் நிறைவுபெற்று தேரோட்டம் விடப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை காண்போரை கவர்ந்திழுக்கும் தேராக இத்தேர் அமைந்துள்ளது. பல்வேறு முன்னேற்றங்களை ஆவூரில் கொணர்ந்த இக்குருவானவர் கி.பி. 1818ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ஆம் தேதி இறைவனடிச் சேர்ந்தார். அடுத்த நாள், நந்தவனத்தில் இவர் அடக்கம் செய்யப்பட்டார்.

கி.பி. 1827ஆம் ஆண்டு முதல் கி.பி. 1844ஆம் ஆண்டு வரை கோவாவைச் சார்ந்த அருட்பணி. ஜோசப் செபாஸ்டின் ரொட்ரீகஸ் ஆவூர் பங்குப் பணியாளராக பணியாற்றினார். இன்று நாம் காணும் ஆவூர் கோவிலை முழுமையாக முடித்தவர் என்கிற பெருமை இவரையே சாரும். இவர் வில்மண்டபங்களையும், மையப்பீடத்தையும் கட்டினார். கி.பி. 1832ஆம் ஆண்டு வடக்கு புறத்தில் கோவில் முகப்பை கட்டினார். கி.பி. 1833ஆம் ஆண்டு தெற்கே இருந்த நடுப்பீடத்தை பெரிதாக்கி, அதன் மரப்பலகைகளில் தங்கமுலாம் பூசி ஜொலிக்கும் பீடமாக்கினார். கி.பி. 1835ஆம் ஆண்ட பீடத்திற்கு மேல் 50 அடி உயரமுள்ள மிகப்பெரிய வளைவு கோபுரத்தை கட்டினார். விலையுயர்ந்த வெள்ளி, தங்கப் பாத்திரங்களையும், ஜரிகையுடன் கூடிய ஆயத்த உடைகளையும் சேகரித்து வைத்தவர் இவரே. இவர் மக்களின் குடிநீரை தேவையைத் தீர்க்க ஒரு ஊரணியை வெட்டினார். இந்த நல்ல குரு கி.பி. 1844ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நோய்வாய்பட்டார். இறுதியில், அதே ஆண்டு ஜூலை மூன்றாம் தேதி இறையடிச் சேர்ந்தார். இவரும் நந்தவனத்திலேயே புதைக்கப்பட்டார்.

அருட்பணி. ஜான் கார்டோஸ் என்கிற கோவை குருவானவர் கி.பி. 1846ஆம் ஆண்டு ஆவூரின் பங்குப் பணியாளராக நியமிக்கப்பட்டார். இவர் மார்ச் மாதம் 22ஆம் தேதி பணியேற்றுக் கொண்டார். ஜூலை மாதம் 29ஆம் தேதி மலம்பட்டி என்கிற கிராமத்தில் விஷபேதி கண்ட ஒருவருக்கு நோயில்பூசுதல் கொடுத்து திரும்பும்போது, இம்மறைப்பணியாளரும் அதே நோயால் தாக்கப்பட்டு, ஜூலை மாதம் 30ஆம் தேதி இரவு இறைவனடிச் சேர்ந்தார். இவர் பணியாற்றிய காலம் குறைவாக இருந்தாலும், இவரின் பணியார்வம் போற்றுதற்குரியதாகும்.

மேற்கூறப்பட்ட ஆவூரின் அரிய வரலாற்று தகவல்கள் அனைத்தும், கி.பி. 1947ஆம் ஆண்டு 'ஆவூர் சரித்திரம்' என்கிற தலைப்பில் திரு. அருளானந்தம் B.A.B.Lit., என்பவரால் தொகுத்து வழங்கிய வரலாற்று ஆவணப்புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இவ்வரிய வரலாற்று நூலை வழங்கிய செண்பகனூர் இயேசு சபை வரலாற்று ஆவணநிலைய காப்பாளர் திரு. லோபோ அவர்களுக்கும். இந்நூலை மறுபதிப்பு செய்து அச்சிட்ட அருட்பணி. குழந்தை சாமி மற்றும் அருட்பணி. டேவிட் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

**திருப்பயணம் தொடரும்..................**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

## உரோமையர்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 1 |
| | 6 | | | | | | | 8 | |
| | | 9 | | | | | 10 | | |
| | | | 13 | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | 14 | 12 | | | | |
| | | | | | | 11 | X | | |
| | 5 | | | | | | | 7 | |
| 2 | | | | X | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

1) தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் வல்லமையுள்ள ……….. இவர் இறந்து உயிர்த்தெழுந்ததால் இந்த உண்மை நிலைநாட்டப்பட்டது. இவரே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.

4) ஏனெனில் ஊனியல் மனநிலை கடவுளுக்குப் …………. அது கடவுளின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதில்லை இருக்கவும் முடியாது.

7) எல்லாவகை உணவையும் உண்போர் அவ்வாறு உண்ணாதோரை இழிவாக எண்ணலாகாது உண்ணாதோரும் உண்பவருக்கு எதிராகத் தீர்ப்பளித்தல் ………….. ஏனெனில் கடவுள் அவர்களையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

8) "பிற இனத்தாரே நீங்கள் ……… ஆண்டவரைப் போற்றுங்கள் மக்களினத்தாரே நீங்கள் அனைவரும் அவரைப் புகழுங்கள்" என்றும் எழுதியுள்ளது அல்லவா!

10) "அவர்களது தொண்டை திறந்த பிணக்குழி அவர்களது நாக்கு வஞ்சகமே ……….. அவர்கள் உதட்டில் உள்ளது விரியன் பாம்பின் நஞ்சு."

11) ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அதுபோலவே, எல்லா ………. பாவம் செய்ததால், எல்லா மனிதரையும் சாவு கவ்விக்கொண்டது.

**இடமிருந்து வலம்**

2) அமைதி வழியை அவர்கள் ………….

3) ……….. நல்லது என் சாவுக்குக் காரணமாக மாறிவிட்டதா? ஒருபோதும் இல்லை. எல்லாம் பாவத்தின் வேலைதான்!

5) கடவுளின் வார்த்தை நிறைவேறவில்லை என்பது என் கருத்து அல்ல. ஏனெனில் இஸ்ரயேல் …………. தோன்றியதனாலேயே அவ்வினத்தில் பிறந்த அனைவரும் இஸ்ரயேலர் ஆகிவிட மாட்டார்கள்.

6) இறையருள் பெற்றவன் என்னும் முறையில் உங்களுள் ஒவ்வொருவருக்கும் நான் கூறுவது உங்களுள் …………. தம்மைக் குறித்து மட்டுமீறி மதிப்புக் கொள்ளலாகாது





ஆசியாக மாறினார். தனது ஒரே மகன் ஈசாக்கையும் கடவுளுக்குப் பலியிடத் தயங்கவில்லை. எனவே அவர் விசுவாசத்தின் தந்தையாக உருமாற்றம் அடைந்தார். ஒன்றை இழந்தே மற்றொன்றைப் பெற முடியும். நாமும் இத்தவக்காலத்தில் நம்மையே நாம் இழந்து விசுவாச மக்களாக உருமாற்றம் பெற்று இறை ஆசீர் பெறுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் நமதாண்டவரின் சீடர். கிறிஸ்தவனாய் இருப்பதால் ஏனைய மக்கள் பெறும் சலுகைகளை இழந்து வாடும் நிலை ஏற்படலாம். நீதிக்காக தமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காக போராட வேண்டியது கிறிஸ்தவர்களாகிய நமது கடமை. நமது பரிசுத்த அழைப்பின் பயனாக கடவுளின் வல்லமை பெற்று , நற்செய்திக்காக நாம் துன்புறத் தயாராயிருக்க வேண்டும். எனவே விசுவாசத்தில் தளர்ச்சி அடையாமல் உறுதியோடு வாழ்ந்திட வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர், பொதுநிலையினராகிய நாங்கள் அனைவரும் இத்தவக்காலத்தில் தாபோர் மலையில் இயேசுவின் சீடர்கள் பெற்ற அதே இறை அனுபவத்தை பெற்று கிறிஸ்துவின் பாடுகள் இறப்பு மற்றும் உயிர்ப்புக்கு சாட்சியாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் உமது அன்பின் பிரசன்னத்தையும் உணர்ந்து விசுவாச வாழ்வில் உறுதி பெற்று உமது ஆசீரையும் உமது கருணையும் நிறைவாக பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில் பல்வேறு ஒறுத்தல் முயற்சிகளின் வழியாகவும், விசுவாசம் நிறைந்த வாழ்வின் வழியாகவும், பழைய பாவ வாழ்வை விட்டு புதிய மனிதனாக உருமாற்றம் பெற்று வாழ இறையருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற ஒவ்வொரு நிகழ்வும் மற்றும் வாழ்வில் வருகின்ற சோதனைகளும், துன்பங்களும் எங்களது வாழ்வில் பயணிக்க இறைவன் கொடுத்த வாய்ப்புக்கள் என்பதை உணர்ந்து அத்துன்பங்களை துணிவோடு சந்திக்கும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அருளையும், மீட்பையும் பெற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இத்தவக்காலத்தில், நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது பழைய வாழ்வு குறித்து மனம் வருந்தி, ஒப்புரவு என்னும் அருட்சாதனத்தில் முழுமையாக பங்கு பெற்று உம்மோடும், எங்கள் அயலாரோடும் ஒப்புரவாகி கொள்ள துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் எங்கள் ஐம்புலன்களின் நிமிர்த்தமாக சந்திக்கின்ற எல்லா சோதனைகளின் மீது வெற்றி கொள்ள தேவையான இறையருளையும் இறை ஞானத்தையும் தரும்படி உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக்காலம் 2 – ஆம் ஞாயிறு (05.03.2023)**

**தொ நூ 12:1-4 2திமொ 1:8-10 மத் 17:1-8**

**முன்னுரை**

விசுவாசம் என்பது கண்ணை மூடிக் கொண்டு இருளுக்குள் இருப்பதை குறிப்பதில்லை மாறாக இருளிலிருந்து ஒளியை நோக்கி செல்வதாகும் என்கிறார் டேவிட் ரீட் என்ற அறிஞர். வாழ்வின் மகிழ்ச்சிக்கும், நிறைவிற்கும் விசுவாசம் முக்கியமானது. நமது விசுவாசம் நமது வாழ்வில் மிக பெரிய மாற்றத்தை ஏற்படுத்த கூடிய ஒன்றாக உள்ளது. எனவே இத்தவக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் நமது பாவ வாழ்விலிருந்து உருமாற்றம் பெற்று மனிதனாக வாழ்ந்திட கிறிஸ்துவின் பாடுகளில் விசுவாசம் கொண்டு வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்புவிடுக்கின்றது.

துன்பங்களைக் கண்டு துவண்டுபோன தனது சீடர்களை ஊக்கப்படுத்தவே இயேசு உருமாறினார். நீதியை நிலைநாட்ட துன்பத்தின் நிறைவே இன்பம் என்பதை வலியுறுத்த, மனிதத்தில் புனிதம் காண உருமாறினார். உலகை மாற்ற முதலில் உள்ளத்தளவில் நம்மில் முழு மாற்றம் காண வேண்டும் என்பதை இயேசுவின் உருமாற்றம் நமக்கு உணர்த்துகின்றது. எனவே இத்தவக்காலத்தில் இயேசுவின் பாடுகளை நமது கண் முன் நிறுத்தி, வாழ்வில் மாற்றம் பெற்று புனித மனிதனாக வாழ்ந்திட தேவையான இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

ஆபிரகாம் தமது முதிர்ந்த வயதில் கடவுளுடைய அழைப்பை ஏற்றுத் தம் வீட்டையும் நாட்டையும் இனத்தையும் இழக்க முன்வந்தார். அதன் பயனாக அவர்கடவுளுடைய ஆசீயைப் பெற்றதோடு , அவரே





9) நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு ……….. அமைதியும் உரித்தாகுக!

**மேலிருந்து கீழ்**

1) திருச்சட்டத்தைப் பெற்றிராத பிற ………….. அதில் உள்ள கட்டளைகளை இயல்பாகக் கடைப்பிடிக்கும்போது அவர்களுக்குத் திருச்சட்டம் இல்லாத போதிலும் தங்களுக்குத்தாங்களே அவர்கள் சட்டமாய் அமைகிறார்கள்.

3) ஆனால் குற்றத்தின் தன்மை வேறு அருள்கொடையின் தன்மை வேறு. எவ்வாறெனில், ஒருவர் செய்த குற்றத்தால் பலரும் இறந்தனர். ஆனால் கடவுளின் ………… இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனிதரின் வழியாய் வரும் அருள்கொடையும் பலருக்கும் மிகுதியாய்க் கிடைத்தது.

6) யூதர்கள் தள்ளப்பட்டபோதே உலகம் கடவுளோடு ஒப்புரவாகியது என்றால், அவர்கள் அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது எப்படி இருக்கும்! இறந்தோர் உயிர்பெற்று ………. என்று சொல்லலாம் அல்லவா?

8) முற்காலத்தில் எழுதப்பட்டவை ………. நமக்கு அறிவுரையாகவே எழுதப்பட்டன. மறைநூல் தரும் மன உறுதியினாலும் ஊக்கத்தினாலும் நமக்கு எதிர்நோக்கு உண்டாகிறது.

9) இத்தகையவற்றைச் செய்வோருக்குக் கடவுள் ………… தீர்ப்பு நீதி வழுவாதது என்பது நமக்குத் தெரியும்.

10) நீங்கள் வலுவற்றவர்கள் என்பதை மனதிற்கொண்டு எளிய முறையில் ………. முன்பு கட்டுப்பாடற்ற வாழ்வுக்கு வழிவகுக்கும் கெட்ட நடத்தைக்கும் நெறிகேட்டிற்கும் உங்கள் உறுப்புகளை நீங்கள் அடிமையாக்கியிருந்தீர்கள்.

13) ஊனியல் மனநிலை கொண்டிருப்போருக்கு ………….. சாவே ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது வாழ்வும் அமைதியும் ஆகும்.

**கீழிருந்து மேல்**

2) அவ்வாறே கடவுள் ஒருவருடைய செயல்களைக் கணிக்காமலே அவரைத் தமக்கு ஏற்புடையவர் எனக் கருதுவதால் ………… பேறுபெற்றவர் என்று தாவீது கூறியிருக்கிறார்:

4) நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று ……………

5) சகோதர சகோதரிகளே என் ………….. மீட்படைய வேண்டும் என நான் உளமார விரும்புகிறேன். அதற்காக நான் கடவுளிடம் மன்றாடுகிறேன்.

7) இதற்காகவே நீங்கள் வரிசெலுத்துகிறீர்கள். அவர்கள் தங்கள் பணியை ……….. போது கடவுளுக்கே ஊழியம் செய்கிறார்கள்.

11) ஆண்டவர் எந்த ……….. தீச் செயலைக் கருத்தில் கொள்ளவில்லையோ அவர் பேறு பெற்றவர்.”

12) ஏனெனில் என்னுள் அதாவது வலுவற்ற என் ஊனியல்பில் நல்லது எதுவும் குடிகொண்டிருக்கவில்லை என எனக்குத் தெரியும். நன்மை செய்யும் விருப்பம் ………… இல்லாமல் இல்லை அதைச் செய்யத்தான் முடியவில்லை.

14) அது மட்டும் அல்ல, நம் மூதாதையாகிய ஈசாக்கு என்னும் ஒரே மனிதர் மூலமாக

………….. குழந்தைகளைப் பெற்றார்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-02-2023**

**சென்ற மாதத்தின் விடைகள் திருத்தூதர் பணிகள்**

**வ. இ. 1.** 1:9;**3.**7:2**; 5**:13;1**; 7**:13:11; **11.** 19:1;**13**.2:14

**இ. வ. 2.** 4:15; **4.** 7:14; **6.** 10:1; **8.** 14:16; **10.**17:13; **12.**20:9;

**மே. கீ. 1.** 2:4; **2.**3:1; **7.** 11:3; **8.** 15:1;**9.** 16:8;**12.** 21:18;

**கீ. மே. 3.** 5:3; **4.** 8:31; **5.**9:5; **11.**18:7; **13.**23:7;

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு ௭

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி



**அன்னையின் முதல் காட்சியை கண்ட பின்னர் வீட்டினில் நடந்த நிகழ்ச்சி**

விண்ணகம் நோக்கிஅ ன்னை சென்றதும்
தன்னக மகிழ்ச்சியை தாங்க இயலவில்லை
என்ன செய்வது என்றே விளங்கவில்லை
விண்ணை நோக்கின கண்கள் இறங்கவில்லை
இருந்த நிலையை தாங்கள் மறந்தனராம்
இரண்டு மணிநேரம் மிகவே உறைந்தனராம்
இயல்பு நிலைக்கு மீண்டும் திரும்பினராம்
இயம்பி தீர்மானம் ஒன்றை விரும்பினராம்
நிகழ்ந்தன எவையினும் கூறல் வேண்டாம்
நிகழ்ந்தது போலவே காட்டல் வேண்டாம்
நிபந்தனை இதுவென பிரிந்து செல்வோம்
நிகழ்ந்தவை அனைத்தையும் மனதில் கொள்வோம்
குட்டிப் பெண்ணல்லவா சுட்டி ஜெசிந்தா!
கட்டிக் காக்கவில்லை தங்கள் அஜெண்டா
வீட்டிற்கு சென்ற மறு நொடியே
கொட்டியே தீர்த்தாள் நிகழ்ந்த படியே
ஜெசிந்தாவின் அம்மா கிண்டல் செய்ய
அப்பா மனுவேல் மனதில் கொண்டார்
லூசியா தனது சிந்தை எல்லாம்
கசியாது என்றே எண்ணிக் கொண்டாள்
இப்படியாய் கழிந்தது அன்றைய தினம் -லூசியா
செபித்திட ஒதுங்கினாள் அடுத்த தினம்
கசிந்ததை ஒட்டுக்கேட்ட லூசியாவின் சகோதரி
யாசித்திட கெஞ்சினாள் யோசிக்காமல் உளறி.
வெகுண்ட நாகமாய் சீறிப் பாய்ந்தனள் - பின்னர்
நடந்த யாவினையும் சீராய் உரைத்தனள்
லூசியாவின் அம்மா மரிய ரோசாவோ
'லூசு' என்றே அழைத்தாள் புரியா தூசியாய்
அதட்டினாள் திட்டினாள் அன்றாடம் மிரட்டினாள்
பொய் கூறி திரிவதாய் பழிகூட சுமத்தினாள்
அனைத்தையும் பொறுமையாய் சகித்தாள் லூசியா
அன்னையின் காட்சியை பதித்தாள் மாட்சியாய்!





வெளியிலிருந்து நம்மை ஆட்டிவிட்டது ஒரு புறம். அதே வேளையிலே நமது ஐம்புலன்களும், நான் எனது எனக்கு என்ற சுயநல வெறியும் நம்மை உள்ளிருந்து அலைக்கழிக்கப்பட்டது மறுபுறம். இவற்றிலிருந்து நமக்கு விடுதலையளிப்பவர் இறைவன் ஒருவனே. எனவே இத்தவக்காலத்தில் செபம், தவம், அறச்செயல்கள் வழியாக சோதனைகள் மேல் வெற்றி கொண்டு இறைவனோடும், அயலாரோடும் ஒப்புரவாகி வாழ இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

வரலாற்றில் முதல் ஆணுக்கு துணையாகக் கடவுள் கொடுத்த முதல் பெண் அலகையினால் வஞ்சிக்கப்பட்டுத் தன் கணவரையும் வஞ்சித்து விட்டாள் என்பதை இன்றைய முதல் வாசகம் கூறுகிறது. முதல் ஆணும் முதல் பெண்ணும் கடவுளுடைய சாயலாகப் படைக்கப்பட்டனர். இருப்பினும் அவர்கள் இருவரும் கடவுளைவிட அலகையை நம்ப, அவருடைய கட்டளைகளை மீறிக் கடவுளுடன் அவர்களுக்கு இருந்த உறவைத் துண்டித்துக் கொண்டனர். நாமும் இறைவனது அன்பு கட்டளையை மீறுகின்றபோது அவரோடு கொண்டுள்ள உறவை துண்டித்துக் கொண்டு இறைவனது அருளை இழக்கின்றோம் என்ற எதார்த்த உண்மையை உணர்ந்தவர்களாக இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

மனிதன் தனது கீழ்ப்படியாமையால் கடவுளோடு கொண்டிருந்த உறவை துண்டித்துக் கொண்டார். துண்டிக்கப்பட்ட இந்த உறவை, இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து மீண்டும் புதுப்பித்தார். இந்த இரண்டு ஆதாம்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டை இன்றைய இரண்டாவது வாசகத்தில் புனித பவுல் விளக்குகின்றார். ஒரு மனிதரின் கீழ்ப்படியாமையால் பலர் பாவிகளானது போல், ஒருவரின் கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள். எனவே இத்தவக்காலத்தில் நமது பாவத்தை தவிர்த்து கிறிஸ்துவுடன் நம்மை இணைத்து இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினராகிய நாங்கள் எல்லோரும் இத்தவக்காலத்தில் செபம், தபம், தர்மம் இவற்றின் வழியாக உமது

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் அன்பில் நிலைத்திருந்து கிறிஸ்தவ அழைத்தல் வாழ்வில் நிறைவு காண அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, எம் கிறிஸ்தவ சமூகத்தில் இருக்கின்ற அனைத்து எற்றத் தாழ்வுகளும், வேறுபாடுகளும் மறைந்து எல்லோரும் ஒற்றுமையோடும், சகோதரத்துவத்தோடும் வாழ அருள் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ வாழ்வில் நாங்கள் எங்களிடையே இருக்கின்ற பகைமை மறந்து எங்களது பகைவர்களை அன்பு செய்யவும், எங்களை சபிப்பவர்களுக்கு ஆசீர் கூறவும், எங்களை துன்புறுத்துவோருக்காக செபிக்கவும் கூடிய வலிமையும் ஆற்றலையும் எங்களுக்கு தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா உமது இரக்கத்தில் நாங்கள் உமது மன்னிப்பை பெறவும், உமது அன்பில் நாங்கள் வாழ்வு பெறவும் உமது துணையில் வாழ்வில் சமாதானம் மற்றும் அமைதி பெறவும் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தவக் காலம் முதல் ஞாயிறு (26.02.2023)**

**தொ நூல் 2:7-9;3:1-7 உரோ 5:12-19 மத் 4:1-11**

**முன்னுரை**

தவக்காலம் கரடுமுரடான உள்ளத்தை பள்ளத்தாக்குகளை உருவாக்கிய உறவுகளை, தரிசு நிலமான இதயத்தை விளை நிலமாக மாற்றும் மகத்தானக் காலம். இக்காலங்களில் வருத்த வேண்டியது உடலை மட்டுமல்ல, உள்ளத்தை. உணவை மட்டுமல்ல, உள்ளத்தின் சுயநல ஆசைகளை. இதுவே உண்மையான மாற்றமாகும். அனுதின வாழ்வில் கடவுளோடும், அயலாரோடும் ஒப்புரவாக்கிக் கொண்டு புதிய மனிதனாக புதிய வாழ்வை தொடர அழைப்பு விடுக்கிறது இத்தவக்காலம்.

ஒரு மனிதனின் வாழ்வில் வரும் சோதனைகள், அம்மனிதன் எந்த அளவிற்கு பாசம், பற்று முதலானவற்றைக் கடந்து முதிர்ச்சி பெற்ற மனிதனாக இருக்கிறான் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. சோதனைகள் எல்லா மனிதருடைய வாழ்விலும் வருகின்றன. ஆதாம் அலகையால் சோதிக்கப்பட்டார். அலகை அவரை வென்றது. கிறிஸ்துவும் அலகையால் சோதிக்கப்பட்டார். ஆனால் அவர் அலகையை வென்று நமக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகிறார். நம்முடைய இன்றைய வாழ்வு சோதனைகள் மிகுந்த வாழ்வு, மண், பெண், பொன் இவை நமக்கு





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் 6 –ம் ஞாயிறு (12.02.2023)**

**சீ ஞா 15:16-20 1 கொரி 2:6-10 மத் 5 :17-37**

**முன்னுரை**

மனிதன் பகுத்தறிவுடையவன், சுய சிந்தனையுடையவன். இவ்வுரிமையைப் பயன்படுத்தி மனிதன் தீமையை விலக்கி நன்மையைத் தேர்ந்தெடுத்து வாழ வேண்டும் என்பது இறைவனின் திட்டம். இன்பவனத்தில் வாழ்ந்த ஆதிப் பெற்றோருக்கு விலக்கப்பட்ட கனியை உண்ணலாகாதெனக் கட்டளை கொடுத்து தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பினை அவர்களுக்கே விட்டுவிட்டார் இறைவன் மனிதனை தனது சாயலாக படைத்த கடவுள், அவனை தனது விருப்புரிமையின்படி செயல்பட அவர்களை அனுமதிக்கின்றார். எனவே வாழ்வில் ஏற்படுகின்ற ஒவ்வொரு நிகழ்வுக்கும் அவனே பொறுப்பு.

மனிதன் அனது வாழ்வை ஒழுக்கம் நிறைந்த ஒன்றாக மட்டும் அமைத்து கொள்ளாமல் அக ஒழுக்கம் நிறைந்த வாழ்வாக்க வேண்டும் என்பதற்காக மலைப்பொழிவை கிறிஸ்து தருகின்றார். கிறிஸ்தவர்களாகிய நமது ஒழுக்கம் மறைநூல் அறிஞர், பரிசேயர் இவர்களை விட சிறந்த முறையில் அமைய பிறரன்பு, பிறர் மனை நோக்காமை, உண்மை பேசல் இம்மூன்று வழிகளிலும் இயேசுவின் படிப்பினைகளை பின்பற்ற இன்றைய நற்செய்தி நமக்கு அழைப்பு விடுக்கின்றது. எனவே நமது வாழ்வு இறைவிருப்பத்தின் படி அமைந்திட நமக்கு இறை ஞானம் மற்றும் இறையருள் தேவைப்படுகின்றது. எனவே நன்மை, தீமையை பகுத்து ஆய்வு செய்யும் இறை ஞானம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசகம் முன்னுரை**

இறைவன் நமக்கு விருப்புரிமை தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுத்திருக்கிறார். எனவே நாம் விரும்பி தேர்ந்தெடுப்பது நீரா? நெருப்பா? வாழ்வா? சாவா? அடிமையா? உரிமையா? என்று சிந்திக்க

அழைக்கின்றது. இறைஞானம் இதற்கு இன்றியமையாதது. சாலமோன் ஆண்டவரே எனக்க ஞானம் வேண்டும் என்று கேட்டது போல, நாமும் இறை ஞானம் கேட்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

உலகில் அனுபவம் வழியாக ஞானம் பெறுகிறோம். இயேசுவே ஞானத்தில் வளர்ந்ததாக நற்செய்தி கூறுகிறது. இந்த ஞானம் புலன்களுக்கும் புத்திக்கும் அப்பாற்பட்டதாக உணர்கிறோம். உலக ஞானம் அழிவிற்குரியது. இறை ஞானம் நம்மை மேன்மைப்படுத்தும், வலிமை மிக்கவர்களாக மாண்புள்ளவர்களாக உயர்த்தும் என்று புனித பவுல் கொரிந்து நகர் மக்களுக்கு அருளும் அறிவுரை கேட்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொது நிலையினர் அனைவரும் தூய ஆவியின் கொடையாகிய இறைஞானத்தை பெற்று இறைத்திருவுளத்தை வாழ்வாக்கிட தேவையான இறை அருளை எங்கள் மீது பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, எங்களது ஆன்மீக , அரசியல் சமூக தலைவர்கள் அனைவரும் தங்களது சுயநலத்தை விடுத்து, பொது நலன் மற்றும் மனித மாண்பு உயர தங்களது வாழ்வை அமைத்து கொள்ள துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, ஒவ்வொரு கிறிஸ்தவனும் , பிறரன்பு, பிறர் மனை நோக்காமை, உண்மை பேசல் இம்மூன்று வழிகளிலும் இயேசுவின் படிப்பினைகளை பின்பற்றி, தங்களது நெறியை பிறரது நெறியை விட சிறந்ததாக அமைத்திட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் கிறிஸ்துவை போல, இறை ஞானத்திலும் , இறை ஒழுக்கத்திலும் நாளுக்கு நாள் வளர்ந்து இறைவனது விருப்பத்தை வாழ்வாக்கிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 7 –ம் ஞாயிறு (19.02.2023)**

**லேவி 19 :1-12;17-18 1கொரி 3:16-23 மத் 5:38-48**

**முன்னுரை**

கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் தூய தன்மையும், பிறரன்பும், இரண்டும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத நிலையிலே மலரும் மணமுமாக இணைந்திருக்க வேண்டும் என்பது இன்றைய இறைவார்த்தை நமக்கு தருகின்ற செய்தி. கடவுளைப் போல நாமும் நிறைவள்ளவராய் இருப்பது நமது இலக்காக இருத்தல் வேண்டும். கடவுளைப்போல நாமும் நிறைவுள்ளவராய் இருப்பது என்பது அவரை போல இரக்கமும், அன்பும் நிறைந்த மக்களாக இருத்தல் என்பதே என்கின்றது இன்றைய இறைார்த்தை வழிபாடு. ஏனெனில் கடவுளது தனிப் பண்பு அவர்தம் இரக்கமும் பேரன்பும் என்கின்றது இன்றைய பதிலுரைப்பாடல்

கடவுள் தமது இரக்கத்தை அனைவர்க்கும் காட்டுகிறார். அவர் தம் கதிரவனை நல்லோர் மேலும், தீயோர் மேலும் உதிக்கச் செய்கிறார். அவ்வாறே நேர்மையுள்ளோர் மேலும் நேர்மை அற்றோர் மேலும் மழையை பொழிகிறார். கடவுளைப் போல நாமும் எவரையும் நமது அன்பு வட்டத்தில் இருந்து ஒதுக்காமல் அனைவரையும் , பகைவரையும் அன்பு செய்து நம்மைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டும் பக்குவம் அடையும்போது நாமும் அவரைப்போல நிறைவு உடையோராய் உயர்கிறோம். எனவே கிறிஸ்துவின் வாழ்வியல் நமது வாழ்வியலாக மாறி, நமது வார்த்தைகளும் , செயல்களும் சான்று பகிர அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

உடன்படிக்கையின் வெளிப்பாடான பத்துக் கற்பனைகளிலே முதல் 3 கற்பனைகள் கடவுளுக்கடுத்த கடமைகளையும் இறுதி 7 கற்பனைகள் பிறரை அடுத்த கடமைகளையுமே கூறுவதிலிருந்து,கடவுள் அன்பு, கடவுள் பணி முதலியன பிறர் அன்பிலும், பிறர் பணியிலுமே காட்டப்படுகின்றன என்பதை உணர்த்துகின்றது இன்றைய முதல் வாசகம். இறையன்பும் பிறர் அன்பும் நமது வாழ்வியலாக மாறுகின்ற போது நாமும் கடவுளைப் போல நிறைவுள்ளவராய் வாழ இயலும் என்ற உண்மை உணர்ந்தவர்களாய் இவ்வாசகததிற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

திருமுழுக்கினால் புனிதமாக்கபட்டவரில் தூய ஆவி குடிகொண்டிருக்கிறார். எனவே ஆவியினால் அருள்பொழிவு செய்யப்பட்டோர் இறைவன் வாழும் ஆலயங்களாக மாறுகின்றார். எனவே நாம் ஒவ்வொருவரும் இறைவனது மீட்பினாலும் , அருள்பொழிவினாலும் தூய ஆவியின் இல்லிடமாக மாறி இறைவனது அருள் செயல்பாட்டை கண்டு உணர்கிறோம் என்ற எதார்த்தத்தை உணர்ந்து இயேசுவோடும், பிறரோடும் இணைந்து வாழ்ந்து ஆண்டவரில் நிறைவுகாண அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.